செந்தமிழ்

தொகுதி 71 | திருவள்ளுவர் 2006-ஆம் ஆண்டு நள ஆண்டு ஆனி மாதம் ஜூன் 76 | பகுதி 2

1 திருவள்ளுவர் கூறும் நகைச்சுவை ... 1
திருமிகு. புலவர் கு. சின்னையன்

2 தமிழ். இசைச்சுடர் முத்துத்தாண்டவர் ... 9
திருமிகு R. பத்மநாபன், B.A., B.T.

3 சிலம்பின் பழைய உரை ... 14
திருமிகு. பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம், எம்.ஏ.

4 அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—தமிழ்த்துறை ... 20
பன்னிரண்டாவது கருத்தரங்கு
திருக்குறள் கருத்தகம்-2

5 வள்ளுவரும் வள்ளலாரும் ... 24
திருமதி. விமலா நடராசன்

6. "தாய்க்காற்றும் கடன்" ... 31
திருமிகு. புலவர் வை. தங்கமணி

7 அறநெறி (தொகுதி 70 பகுதி 3-ன் தொடர்ச்சி) ... 33
திருமிகு. செஞ்சொற்பாவலர் ப. சங்கரலிங்கம்

8 திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும்—வரலாற்று அமைப்பும் ... 36
திருமிகு. இரா. கோதண்டராமன், எம். ஏ., எம். ஏ.

9 சங்கச் செய்திகள் 40

10 மதுரைத் தமிழ்ச் சங்கம் புலவர் தேர்வு பற்றிய அரசாணை... 42

திருவள்ளுவர் கூறும் நகைச்சுவை.

(புலவர் கு. சின்னையன்)

முன்னுரை:-

உலகில் சுவையினை விரும்பாதவர் யாருமில்லை. சுவை என்றதும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் அறு சுவைகளைத்தான் அனைவரும் எண்ணுவர். இவை, நாவாலறிந்து கொள்ளப்படுவதால் நாச்சுவை என்று கூறப்படுகின்றன. இச் சுவைகளுள், இனிப்புச் சுவையை மட்டும் எல்லா உயிர்களும் விரும்புகின்றன. நாச் சுவை உடல் வளர்ச்சிக்கு மட்டும் காரணமாயிருத்தலோடு, மிகினும், குறையினும் நோய் உண்டாக்குவதாயமைந்திருக்கின்றது.

செவி மூலமாகவும் கண் மூலமாகவும் அறியும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, காமம் என்னும் எண் சுவைகளைச், செவிச் சுவை என்று, திருவள்ளுவர் கூறியுள்ளார். இவற்றுடன் பிற்காலத்தில் சாந்தம் என்னும் சுவையினைச் சேர்த்து ஒன்பதாகக் கூறுகின்றனர். மக்களின் உள்ளத்தே தோன்றும் உணர்வுகள் புறத்துறுப்புகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. இங்ஙனம் வெளிப்படும் உணர்வினை மெய்ப்பாடு என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

செவிச் சுவையின் சிறப்பு:-

எண் சுவைகளை உலகியலிற் காண்பது போலவே, புலவர்கள் இயற்றிய இலக்கியங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளப்படும். உலகியலிற்காணும் சுவையினும் இலக்கியங்களில்காணும் சுவையே சிறந்ததாயிருக்கின்றது. உலகியற் சுவை, தோன்றி மறைந்துவிடுகின்றது ஆனல், இலக்கியங்களில் தோன்றும் சுவை, என்றும் நிலைத்து நிற்கின்றது. எண் வகைச் சுவைகளில் நகைச் சுவையே அனைவராலும் விரும்பப்படுகிறது.

நகைச்சுவை மனத்திற்கு மகிழ்வூட்டுகின்றது. கவலையை மாற்றுகின்றது. அறிவிற்கு விருந்தளிக்கின்றது. உடலுக்கும் நன்மை அளிக்கின்றது. எனவே, இச் சுவையை விரும்பாமல் நாச் சுவையை

மட்டும் விரும்புவர் மக்களாகார். மாக்களே யாவர். இவர்கள் உலகத்தில் வாழ்வதால் ஏற்படுவது நன்மையுமில்லை, இறப்பதால் ஏற்படும் தீமையுமில்லை. என்பதை.

"செவியிற் சுவை உணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

என்று, வள்ளுவர் கூறியுள்ளார்.

நகைச் சுவையின் வகைகள்:-

எண் வகைச் சுவைகளைக் கூறிய தொல்காப்பியர். முதலில், நகைச் சுவையைக் கூறுகின்றார். ஒருவரையொருவர் இகழ்ந்துரைக்கும்போது நகை தோன்றுகின்றது, பற்றும், இளஞ்சிறார்களின் நடையும். உடையும், தோற்றமும். செயலும், சொற்களும் நகைச்சுவையை உண்டாக்கின்றன மேலும், பைத்தியங் கொண்டோர். அறிவற்றோரின் செயல்களும் பிறவும் நகைச் சுவையை எழுப்புகின்றன. எனவே, உலகியலில் நான்கு அடிப்படையிலிருந்து நகைச் சுவை தோன்றுகின்றது என்பதனை,

"எள்ளல் இளமை பேதமை மடனென்று
உள்ளப் பட்ட நகை நான்கென்ப"

என்று தொல்காப்பியர் கூறியிருக்கின்றார்.

உலகியலிற் காணப்படும் நகைச் சுவை, புறத்தோற்றங்களாலும், ஏற்றத் தாழ்வான ஒலியமைப்பாலும், புதிய கருத்துக்களாலும் பிறவற்றாலும் தோன்றுகின்றது ஆனால், இலக்கியங்களில் காணப்படும் நகைச் சுவை, பெரும்பாலும், எள்ளல் என்ற அடிப்படையில், சிலேடைச் சொற்களைக் கொண்டும், வஞ்சப் புகழ்ச்சி அணியைக் கொண்டும், நுண்ணிய கருத்துக்களைக் கொண்டும் அமைந்திருக்கின்றது. காளமேகப் புலவர் பாடியுள்ள செய்யுட்கள் பல. சிலேடைச் சொற்களைக்கொண்டதாகவும், வஞ்சப் புகழ்ச்சி அணியமைந்ததாகவும் விளங்கி நகைச் சுவையை உண்டாக்கின்றன.

வள்ளுவர் கூறும் நகைச்சுவை:-

திருவள்ளுவர் தாமியற்றிய நீதி நூலாகிய திருக்குறளிலும் நகைச் சுவை தோன்றக் கூறியிருக்கின்றார். கயவர் என்போர், கீழ்த்தரமான செயலைப் புரிவோராவர் இவர்கள, உடலால் மக்களைப் போல் தோன்றி, செயலால் விலங்கினும் இழிந்தவராவார்கள். நெல்லோடு தோன்றும் பதர்போல, மக்களோடு தோன்றும் பதராக விளங்குகின்றார்கள். இவர்கள் தாமாகவும் உணரமாட்டார்கள்.

பிறர் உணர்த்தினும் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். இத்தகைய தீய பண்புகள் நிறைந்த கயவர்களுக்கு அறிவுரை கூறி, அவர்களைத் திருத்த எண்ணினர் திருவள்ளுவர். அவர்களைக் காணும்போது அவருடைய உள்ளத்தில் வன் சொற்கள் தோன்றி வருகின்றன. ஆனால், வன் சொற்களைக் கூறினல் அவர்கள் வருந்துவார்களே தவிர, திருந்துவார்கள் என்று கூறமுடியாது. மேலும், பிறர் மனம் நோகும்படி வன் சொற்களை வழங்குதற்கும் வள்ளுவர் உள்ளம் இடந்தரவில்லை. ஆதலின் அவர்களைப் புகழ்வதுபோல் பழித்துரைக்க எண்ணினர்.

"கவலையின்றி வாழ்வதால், நன்மைகளை அறியும் சான்றோர்களைவிட கயவர்கள் சிறந்தவர்கள் ஆவார்கள்" என்று கூறினர். இதனை,

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்" என்று கூறியுள்ளார்.

நன் மக்கள் இம்மை இன்பத்திற்கேதுவான புகழை அடைதற்கும், மறுமை இன்பத்திற் கேதுவான அறத்தைப் புரிதற்கும் வீட்டின்பத்திற்கேதுவான ஞானத்தை அடைதற்கும் விரும்புகின்றனர்கள். இவற்றை அடைதற் கேதுவான செயல்களைச் செய்து கொணடிருக்கும்போது, அதிமாக செய்யவில்லையே என்றும், இவற்றிக்கு இடையூறு வருமோ என்றும், இவற்றிக்கு மாறுபட்ட, பழி-பாவம்-அறியாமை என்பவற்றுள் யாது தோன்றுமோ என்றும் கவலையடைகின்றனர்கள். ஆனல், கீழ்மக்கள், புகழ் முதலியவற்றை நீக்கி, பழி பாவங்களைச் செய்து வந்தபோதிலும், ஒரு கவலையுமில்லாதவராய் இருக்கின்றனர்கள். எனவே, சான்றோர்களைப் பழிப்பதுபோல் புகழ்ந்தும், கயவர்களைப் புகழ்வதுபோல் இகழ்ந்தும் திருவள்ளுவர் கூறியிருப்பது நகைச் சுவை எழுப்புவதாயிருக்கின்றது. இனி, பேதமை என்ற அதிகாரத்திலமைந்த குறட்பா ஒன்றைக் காண்போம்.

பேதையார்கேண்மை:-

பேதைமை என்பதற்கு அறியாமை என்பது பொருள். இவ்வறியாமை, வறுமையும், பழியும், பாவமும் பொருந்திய செயல்களை மேற்கொண்டு, செல்வம், புகழ், அறம் முதலியவற்றைக் கெடுத்து விடுகின்றது. பேதைமையுடையவர்கள், பழி பாவங்களைப் புரிய நாண மாட்டார்கள். செய்வன, தவிர்வன என்பவற்றை. எண்ண மாட்டார்கள்; இன்னர்-இனியார் என்று கருத மாட்டார்கள்; குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம் என்பவற்றுள், ஒன்றையும் விரும்ப மாட்டார்கள். இத்தகைய பேதையரோடு அறிவுடையோர். சேர்ந்திருப்

பதைவிட அவரை விட்டுப் பிரிந்திருப்பதே சிறந்ததாகும் என்று நாம் கூற விரும்பிய கருத்தை,

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின் கண்
பீழை தருவதொன் றில்' என்ற குறளின்மூலம் விளக்கி யுள்ளார்.

சான்றோர் நட்பு, வளர்பிறை போன்றது; நன்மையளிப்பது. பிரியும் காலத்தில் துன்பந்தருவது; ஆனால், பேதையர் நட்பு தேய்பிறை போன்றது, தீமை தருவது, பிரியுங்காலத்தில் துன்பம் தருவது. எனவே பேதையாருடன் கூடி இருந்தால் அவரை விட்டு பிரிவதே சிறந்தது என்ற கருத்தை எதிர்மறை வாயிலாகக் கூறியிருப்பது நகைச் சுவையைத் தோற்றுவிக்கிறது. 'புல்லறி வாண்மை' என்ற அதிகாரத்திலுள்ள குறட்பா ஒன்றினை நோக்குவோம்.

அறிவிலார் செயல்கள்:-

அற்பமான சிற்றறிவினை உடையோர் புல்லறிவாளராவார்கள். இவர்கள், சிற்றறிவுடையவராயிருந்த போதிலும், தம்மைப் பேரறிவுடையார் போல் கருதிக்கொள்கின்றனர். இவர்கள் உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற்களை ஏற்கமாட்டார்கள்; செல்வத்தைப் பெற்றிருந்த போதிலும் அச்செல்வத்தைக் கொண்டு இம்மை-மறுமைப் பயன்களை அடையமாட்டார்கள்; பொருளை அறவழியில் செலவழிகக மாட்டார்கள்; இத்தகைய புல்லறிவாளர் சிலர், யாராவது ஒருவர்க்குத் தம்மிடமுள்ள பொருளைக் கொடுத்திருக்கக்கூடும். அங்ஙனம் கொடுத்ததைக் கொண்டு. அவர்கள் இம்மை-மறுமைப் பயன்களைக் கருதிக் கொடுத்ததாகக் கருத வேண்டாம். எளியவரிடத்து இரக்கம் காட்டிக் கொடுத்திருக்கின்றார் என்று எண்ணவேண்டாம். அங்ஙனம் அவர் கொடுத்ததற்குக் காரணம் பொருளை ஏற்றவன் செய்த புண்ணியப் பயனே ஆகும் என்பதனை,

"அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதிலாது
மில்லை பெறுவான் தவம்" என்று கூறியிருக்கின்றார்.

புல்லறிவாளர்கள், கட்டி வைத்து அடிப்பவர்கட்கும், கற்களை எற்றி வருந்துபவர்கட்கும், தூரத்தில் நின்றுகொண்டு உதைப்பவர்களுக்கும், கைகளை மடக்கிக் மடக்கிக் கொண்டு குத்தி, பற்களை உடைப்பவர்களுக்கும் தம்மிடமுள்ள பொருளைக் கொடுப்பார்களே தவிர பாடிவரும் புலவர்கட்குப் பொருள் கொடுக்க மாட்டார்கள். இக்கருத்தை,

"கட்டி யடிப்போர்க்கும் கன்மீதி லேற்றுவோர்க்கும்
எட்டி உதைப்போர்க்கும் ஈவரே-திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பொருள்" என்ற தனிப்பாடல் செய்யுள் நமக்கு அறிவிக்கின்றது, இவ்வாறே,

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு"

என்று, திருவள்ளுவரும் கூறியிருக்கின்றார்.

எனவே, அறிவற்றவர்கள், அறங்கருதி தம்முடைய பொருளைப் பிறர்க்குக் கொடுக்கமாட்டார்கள் என்ற கருத்தை, மறைமுகமாகக் கூறியிருப்பது. நகைச் சுவை அளிப்பதாயிருக்கின்றது இனி, காதற் சிறப்பு உரைத்தல் என்ற அதிகாரத்திலுள்ள குறட்பா ஒன்றினைக் காண்போம்.

காதற் சிறப்பு:-

தலைமகனும்-தலைமகளும், தத்தம் காதல் மிகுதியை ஒருவர்க்கொருவர் மாற்றிக் கொள்ளுதலைக் காதற்சிறப்புரைத்தல் என்ற அதிகாரத்தில் கூறியிருக்கின்றார்,

களவு வாடிக்கையில், தலைமகன், ஊரில் தோன்றிய அலர் அடங்குமாறு, சில நாட்கள் மட்டும் தலைவியை விட்டுப் பிரிந்திருந்திருந்தான். தலைவனின் வருகையைக் காணு தலைவி, மிகவும் வருந்தினுள். பின்னெருநாள். தலைவன் தலைவியைக் காண வந்தான். வந்த தலைவனைத் தோழி கண்டாள். இருவரும் சிறிதுநேரம் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

தோழி:- தலைவா! ஏன் இத்தனை நாட்களாக இங்கு வரவில்லை?

தலைவன்:- ஊரில் தோன்றிய அலரை மறைப்பதற்காகவே நான் இங்கு வரவில்லை.

தோழி:- களவு வாழ்க்கை என்றேனும் வெளிப்படாமல் இருக்குமா?

தலைவன்:- வெளிப்படுதற்கு முன்னரே திருமணம் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன்.

தோழி:- திருமண ஏற்பாட்டைப் புரிந்து கொண்டிருந்த நீர்? அன்பில்லாமையால்தானே அவளை நினைக்காமலிருந்தீர்?

தலைவன்:- ஆம்; நான் தலைவியை நினைக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனுல், அவள்மீது அன்பில்லாமல் இருந்தேன் என்பதை ஏற்கமாட்டேன்.

தோழி – ஐயோ! உம்மை அன்புடையவர் என்றல்லவா நினைத்தேன். அதற்குள், தலைவியை மறந்துவிட்டீரே!

தலைவன்;- அன்பிருந்ததால்தான் நான் தலைவியை நினைக்காமலிருந்தேன். அவளை மறந்திருந்தால்தானே நினைத்திருக்க முடியும்? அவள்தான் என் நெஞ்சத்தில் என்றும் இருந்துகொண்டிருக்கிறளே?

தோழி.- நீர், சிறந்த காதலராக மட்டுமில்லாமல் தலைசிறந்த நாவலராயுமிருப்பதை அறிந்துகொண்டேன். நன்றி.

தலைவியைக் காணவந்த உம்முடன் இவ்வளவு நேரம் பேசி காலத்தை வீணாக்கியதாகக் கருதி வருந்த வேண்டாம். அதோ! தலைவி காத்துக்கொண்டிருக்கிறள். வருகிறேன். வணக்கம்.

இங்ஙனம் தலைவனுக்கும் தோழிக்கும் நிகழ்ந்த உரையாடற் கருத்தினை யமைத்து,

''உள்ளுவன் மன்யான் மறப்பின் மறந்தறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்'' என்று, நகைச் சுவை தோன்றக் கூறியுள்ளார். இனி 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் குறட்பா ஒன்றைக் காண்போம்.

ஊடலும், கூடலும்:-

தலைவனும் தலைவியும் சேர்ந்திருந்த இடத்தில் தலைவன் தவறு புரியாமலிருக்கும்போதும், காதல் மிகுதியால் நுட்பமாகிய காரணம் இருப்பதாகக் கருதி, அதனை அவன்மீதேற்றி தலைவி பிணங்குதலைத் தெரிவிப்பதே புலவி நுணுக்கமாகும்.

தலைவன், இயல்பாகத் தும்மியபோது, பிற பெண்ணொருத்தி அவன் நினைப்பதாகக்கூறி வருந்துவாள். இப்பிறவியில் உன்னை விட்டுப் பிரியேன் என்று தலைவன் கூறியதைக் கேட்டு, "அடுத்த பிறப்பில் பிரிந்திருப்பீரோ?" என்று கூறி புலவி கொள்வாள். இத்தகைய செய்திகளை இவ்வதிகாரத்தில் கூறியுள்ளார்.

தலைவனும் தலைவியும், பூங்கா ஒன்றிக்குச் சென்று மேடையில் அமர்ந்திருந்தனர். எழுந்து சென்று மலர் பறித்து வந்த தலைவி, தலைவனின் பின்புறம் வந்து. அவனுடைய கண்களைத் தன் கைகளால் மறைத்தாள். அதுபோது தலைவனுக்கும் தலைவிக்கும் நிகழ்ந்த உரையாடலை காண்போம்.

தலைவன்:- தன் கையால் தலைவியின் கரத்தைப் பிடித்து 'யார்' என்ருன்?

தலைவி;- (தலைவனை விட்டுப் பிரிந்து இன்று கண்ணீர்விட்டு கலங்கி) உனக்கு எத்தனை காதலிகள் இருக்கின்றார்கள்?

தலைவன்:- ஏன் உனக்கு இத்தகைய ஐயம்? நீ ஒருத்திதான் என் காதலி.

தலைவி:- பல காதலிகள் இருப்பதால்தானே 'யார்' என்ற சந்தேகம் உமக்கு ஏற்பட்டிருக்கின்றது?

தலைவன்:- நான், 'யாரினும்' என்று கூறுதற்கெண்ணி 'யார்' என்று தொடங்கினேன். அதற்குள் நீ அவசரப்பட்டுவிட்டாய்?

தலைவி:- நான் ஒன்றும் அவசரப்பட்டுக் கூறவில்லை; அவமானப் பட்டுக் கூறுகின்றேன்.

தலைவன்:- என்ன அவமானம்?

தலைவி:- பல பெண்கள் மீது காதல் கொண்டிருக்கும் நும்மை என் காதலனாகக் கருதியது எனக்கு அவமானம்! அறிவற்ற செயல் அல்லவா?

தலைவன்:- எல்லோரையும் விட உன்னிடத்தில் நான் மிகவும் அன்பு கொண்டிருக்கின்றேன் என்பதற்காகவே 'யாரினும் காதலம்' என்றேனே தவிர. தவறாகக் கூறவில்லையே?

தலைவி:- எல்லோரையும்விட என்றால், எல்லாக் காதலிகளையும்விட என்பதுதானே பொருள்.

தலைவன்:- தாய், தந்தை, அண்ணன், தம்பி, முதலியோரை விட உன்னிடத்தில் நான் மிகவும் அன்பாக இருக்கிறேன் என்ற பொருளில்தான் நான் கூறினேன். நீ தவறாகக் கருத வேண்டாம்.

தலைவி:- அன்புக்கும் காதலுக்கும் வேறுபாடு உண்டு. தாய் தந்தையரிடத்தில் நீர் கொண்டிருக்கும் பாசத்திற்குப் பெயர் அன்பு, என்னிடத்தில் நீர் கொண்டிருக்கும் பாசத்திற்குப் பெயர் காதல்:

தலைவன்:- காதல் என்ற சொல் 'காத்தல்' என்ற பொருளில்தான் அமைந்திருக்கின்றது. அனைவரையும் காக்க வேண்டியது என் கடமையல்லவா.

தலைவி:- நான் உன் கடமையைக் குறித்துக் கூறவில்லை. உன் உடலைத் தாடுதற்குரிய உரிமை காதலியாகிய எனக்குத்தானே உரியது. நான் நும் கண்களை மூடியபோது என் பெயரைக் கூறாமல், 'யார்' என்று கூறியது தவறல்லவா?

தலைவன்;- ஒருவன் ஒருத்தியைக் காதலிப்பதுதான் தமிழ்ப் பண்பு. இத்தகைய பண்புள்ள தமிழ்க் குடும்பத்தில் பிறந்த நான், பிறர் நெஞ்சு புகாதவனாகவே வாழ விரும்புகின்றேன். நீயும் பிறர் நெஞ்சு புகாத 'பெண்' என்பதற்காகவே, உன்னை என் காதலியாக ஏற்றுக்கொண்டிருக்கின்றேன். ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொண்ட பின் கொள்வதுதான் காதல். முன்பின் எண்ணிப் பார்க்காமல் ஒருவரையொருவர் கண்டதும் காதல் கொள்வது காமமாகும். காதல் வாழ்வு அன்பிற்கும், இன்பத்திற்கும் உரியது; அறநெறியைப் பின்பற்றுவது, ஆன்றோரால் போற்றப்படுவது. ஆனல், காம வாழ்வு துன்பத்திற்குரியது, மறநெறியைப் பின்பற்றுவது ஆன்றோரால் வெறுக்கப்படுவது. எனவேதான், ஆன்றோர்கள், காதல் வாழ்வைப் புகழ்ந்தும். காம வாழ்வை இழைத்தும் கூறியுள்ளார்கள். நம் இருவர்க்கும் ஏற்பட்ட வாழ்வு காதல் வாழ்வு. இக் காதல் வாழ்வில் ஐயத்திற்கு இடமளித்தலாகாது.

தலைவி.- உங்கள் மீது நான் ஐயங்கொண்டு கூறவில்லை. ஊடுதல் காமத்திற் இன்பமல்லவா? உங்கள் அறிவுரையைக் கேட்பதற்காகவே இங்ஙனம் கேட்டேன். அறிவுரை கேட்டு மகிழ்கின்றேன். நேரமாகிவிட்டது, வீட்டிற்குப் போகலாமா?

தலைவன்:- ஆம்! செல்வோம். (இருவரும் மகிழ்ச்சியுடன் செல்கின்றனர்.)

இத்தகைய உரையாடற் கருத்துக்களையெல்லாம் கீழ்க்காணும் குறளில் அமைத்திருக்கின்றனர்.

"யாரினும் காதல மென்றேமா ஊடினள்
யாரினும் யாரினும் என்று"

முடிவுரை:-

திருவள்ளுவர் நகைச் சுவை பொருந்தக் கூறியிருப்பது கற்கும் தோறும், கேட்கும் தோறும், நினைக்கும் தோறும் இன்பமூட்டுவதாயமைந்திருக்கின்றது. பண்புடையவர்கள் யாவருடனும் கலந்து மகிழ்வார்கள். தாமடையும் துன்பத்தையும் இன்பமாகக் கருதித் துன்பத்தை மறப்பார்கள். இவர்கட்கு இவ்வுலகம் இன்பூட்டுவதாயமைந்திருக்கும், ஆனல், பண்பில்லாதவர்கள், பிறருடன் கலந்து மகிழமாட்டார்கள். உலகியலை அறிந்து நடக்கமாட்டார்கள் இருளில்லாத பகற்பொழுதும் இவர்கட்கு இருட்பொழுதாகவே அமைந்திருக்கும்.'

"நகல்வல்ல ஈல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்" — குறள்,

—(*)—

தமிழ், இசைச்சுடர் முத்துத்தாண்டவர்

R. பத்மநாபன், B.A; B.T:
வேலூர்-12

சோழவளநாட்டில் பழங்காலந் தொட்டு திவ்யசிவ ஷேத்திரமாகிய சீர்காழியை நினைத்தால் நமக்கு மூன்று பெயர்கள் நினைவுக்கு வரும். ஒன்று கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த காசவ சமயக்குரவருள் ஒருவரான திருஞானசம்பந்தர்; மற்றொருவர் 'இராம நாடகம்' இயற்றிய அருணாசலக்கவிராயர் (1712-1779); மூன்றாவது பெரியார் தமிழிசைப் புலவர், சிவநேசச் செல்வர் முத்துத்தாண்டவர்.

இளமையில் இவருக்கு, 'தாண்டவன்', என்ற பெயரே இருந்தது. சீர்காழிப்பதியிலிருக்கும் தோணியப்பருக்கு இசைத் தொண்டும், வாத்தியத்தொண்டும் ஒருங்கே செய்து வந்த இசை வேளாளர் குடியில் தாண்டவர் தோன்றினார்.

வறுமையில் வாடிய தாண்டவர் முற்பிறப்பின் தீவினைப் பயனாக, தொழு நோயால் வருந்தலானார்; அதனால் மக்கள் இவர் பால் அருவருப்புக்கொண்டு இவரை கவனிக்காமல் புறக்கணித்தனர். ஆனால் நல்ல வேளையாக, இவரது உள்ளத்தில் யாதொரு மாசுமின்றி, தூய நினைவுடன் இருந்ததால் இவருடைய மனம் ஆண்டவனிடம் சென்றது. மக்களில் நன்னெறியில் நடப்போர் தேவர்; அல்லாத நெறியில் நடப்போர் நரகர் என்று பவணந்தி முனிவர் கூறுவதற்கிணங்க, நன்னெறியிற்சிறிதும் விலகாமல் தேவராசத்திகழ்ந்தார் தாண்டவர்.

தாண்டவர் தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து நீராடி, கோவிலுக்குச் சென்று தோணியப்பரை வணங்கி வந்தார். தமிழ் மொழியில் அவருக்குத் தேவையான பயிற்சி இல்லாவிடினும் கடவுளின் அருளால் அவர் தவறாமல் இறைவனை வணங்கிவந்தார்.

இப்படி கடவுளை வணங்கி வருங்காலத்தில் அதே குலத்தில் தோன்றிய ஒரு சிவநேசச் செல்வி சிவநெறிப் பாடல்களைப்பாடி

வருவதை தாண்டவர் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். அவ்வம்மையார் தாண்டவருக்குச் செவிச் செல்வத்தை வழங்கியதோடு, தினந்தோறும் அவர் வயிற்றுக்குச் சிறிது உணவளித்து அவரை ஆதரித்து வந்தார்.

சில நாட்களுக்குள் அவ்வூரில் ஒரு தவறான செய்தி நாட்டுத் தீ போல் பரவலாயிற்று அவ்வம்மையாரின் உறவினர்களில் ஒரு சில பெண்கள் அவ்வமையாரை இழிவாகவும், பழித்துப் பேசவும். கங்கணங் கொண்டனர். அவ்வம்மையாருக்கு ஏதேனும் கொடிய தீங்கு ஏற்படுமோவென்று அஞ்சி தாண்டவர் அம்மையார் வீட்டுக்குப் போவதை அடியோடு விடுத்தார், தாமதமில்லாமல் தாண்டவருக்கு உணவு கிடைத்து வந்தது; அதற்கும் இப்பொழுது ஆபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட விளைவு அவர் சோறில்லாமல் பட்டினியால் வாடவேண்டியிருந்து. இதுவும் கடவுள் சித்தம் போலும் என்று தாண்டவர் எண்ணினர்.

தாண்டவர் இவ்விதம் உணவின்றியும் உறவினரின்றியும் தடுமாறியிருந்த நாட்களில் ஒரு நாள் கோயிலில் பசியின் மிகுதியால் வாகனக் கிடற்கிற்குள போய், தன்னையறியாமலே உறங்கிப் போய் விட்டார், கோயில் தானிகர் இவரைக் கவனிக்காமல், பூசை முடிந்ததும், கோயில் திருக்காப்பிட்டுக் கொண்டு போய் விட்டார். நள்ளிரவில் தூக்கம் கலையப் பெற்று எழுந்தார் தாண்டவர்: தன் நிலையைக் கண்டு கண்ணீர் விட்டார்; தோணியப்பரை வாயார, மனமார வணங்கினர்.

உண்மைத் தொண்டர்களுக்கு கடவுள் விரைந்துவந்நு உதவுகிறர். என்பதை நாம் பார்க்கிறேம். அங்ஙனமே பார்வதியம்மையார் தாண்டவரைக் கடைக் கண்ணுற் பார்த்து, கோயிலின் குருக்களுடைய மகளைப் போல உருவந்தாங்கி, ஒரு தட்டில் உணவுடன் தாண்டவரிடம் வந்தார். 'என் தந்தையார் இந்த உணவைக் கொடுத்து விட்டு வருமாறு என்னிடம் சொன்னர்'. என்று பார்வதி அம்மையார் கூறி, தான் கொண்டு வந்த சோற்றை அவரிடம் கொடுத்தார்.

மட்டற்ற மகிழ்ச்சி யோடு உணவையேற்றுக் கொண்டு தாண்டவர் பசியடங்க உண்டார். அவருடைய வயிறு வாழ்த்திற்று. அவர் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு'

தனது கொடிய நோய்க்கு ஓர் அரிய மருந்தும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உடனே அம்மையார் தில்லைக்குச் சென்று நடராஜனை வணங்கி, பதிகம் பாடினல், பிறவி நோயும் நீங்கிவிடும், என்று அருள் வாக்கு வழங்கி மறைந்தார்.

'கேட்டதெல்லாம் வழங்கும் முழுமுதற் கடவுள் கடைக்கண் நோக்கினல் அடுத்தமிழில் பாடுவதற்குத் துணை செய்வான்! என்று எண்ணி, இரவைக் கழித்தார். மறுநாள் காலை தானிகர் வந்து கதவைத் திறந்தார். உள்ளே தாண்டவர் இருந்ததைக் கண்டார் தனக்கு அம்மையார் வந்து உணவளித்த விதத்தை தாண்டவர் தானிகரிடம் எடுத்துரைத்தார். இதைக் கேட்ட தானிகர் மூக்கின் மேல் கை வைத்து வியப்புற்ருர். அப்பொழுது தாண்டவர் முகத்தில் என்றுமில்லாத ஒரு பொலிவு தோன்றிற்று. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், தாண்டவரை 'முத்துத்தாண்டவர்' என்று சிறப்பாக அழைக்கலானுர். தாண்டவர் அன்னுள் முதற்கொண்டு முத்துத் தாண்டவர் என்று அன்பாக அழைக்கப்பட்ட பெரியாரானுர்.

மறுநாள் தாண்டவர் சீர்காழியிலிருந்து இருபது கல் தூரத்தி லிருக்கும் தில்லையை நோக்கிப் பயணமானுர். அக்காலத்தில் பிரயாணிகள் எல்லோரும் பெரும்பாலும் நடந்துதான் போக வேண்டும். இடையில் இருக்கும் ஆறுகளையும் ஏரிகளையும் கடந்து போக வேண்டியிருந்தது.

தில்லையின் எல்லையை அடைந்ததும், அவர் கீழே விழுந்து, பணிந்து வீதிவலம்வந்து சிற்சபைக்குச் சென்று, இறைவனைத் இறைஞ்சி நின்ருர். பக்தர்களில் ஒருவர், 'பூலோக கயிலாயகிரி சிதம்பரம்' என்று அடியெடுத்துக் கொடுத்தாற்போல கூற, தாண்ட-வர் அதையே தமது கீர்த்தனைக்குப் பல்லவியாகக் கொண்டு' 'பூலோக கயிலாயகிரி சிதம்பரமல்லாமற் புவனத்தில் வேறுமுண்டோ என்ற பாட்டை பாடினுர், பொன்னம்பலவாணன் அவருடைய பக்தி வெள்ளத்தைக் கண்டு மகிழ்ந்து, அவருடைய தொழுநோய் நீங்குமாறு அருள் சுரந்து, ஐந்து பொற்காசுகள் பஞ்சாட்சரப் படியின் மேல் வைத்து, பெற்றுக் கொள்ளுமாறு திருவாக்களித்தார். இதைக்கண்டு தாண்டவர் மனமுருகி, பன்முறை இறைவனைத்துதி, செய்தார். வெகு நேரம் தன்னையே மறந்து திருச்சந்நிதியிலே நின்று கொண்டு மேலும் பதிகம் பாடினுர்.

இங்ஙனம் தாண்டவர் அதிகாலையில் எழுந்து, சீர்காழியி லிருந்து சிதம்பரத்திற்குச் சென்று, இறைவனை வணங்கி, அன்பர்கள் வாயிலிருந்து வருகிற சொல்லையே பல்லவியாக வைத்துக்கொண்டு கீர்த்தனம்பாடி, ஐந்து பொற்காசுகளைப் பெற்று, சிவானந்தத்தில் மகிழ்வார். ஒருநாள் சந்நதியில் பக்தர்கள் பேசாமலிருந்ததைக்கண்டு, பேசாதே நெஞ்சமே பேசாதே', என்ற அடியைப் பல்லவியாகக், கொண்டு, பதின்மூன்று அடிகள் கொண்ட அழகான தொரு பாட்டுப் பாடினர். வழக்கம் போல் பஞ்சாட்சரப்படியில் வைக்கப்பெற்ற பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு ஊர் திரும்பினர்.

மழைக்காலம் வந்தது சீர்காழிக்கும் சிதம்பரத்திற்கும் மலைப் பாம்பு போல் இடையில் இருக்கும் கொள்ளிடத்தில் வெள்ளம் கரை புரண்டு ஓடிற்று. இசைவாணர் தாண்டவருக்குச் சிதம்பரம் போக வேறு வழியில்லை ஆற்றைத்தாண்டித்தான் ஆகவேண்டும் கரையின் மேல் நின்று கொண்டு சிதம்பரத்தை நோக்கி ஏக்கம் தோய்ந்த உள்ளத்துடன், செய்வது இன்னது என்று அறியாமல், 'காணுமல் வீணில் காலங்கழித்தோமே!' என்ற அடியைப் பல்லவியாகக் கொண்டு. அநுபல்லவியில் ஓரடியும், ஒவ்வொன்றிலும் நான்கு அடிகள் கொண்ட நான்கு சரணங்களையும் பாடினர். உண்மை பக்தர்களுக்கு இறைவன் உடனே இறங்குவான் என்பது உலகம் கண்ட உண்மையல்லவா? ஆண்டவன் அவ்வழகிய அருட்பாடலுக்கு இரங்கி, ஆற்று வெள்ளம் விலகுமாறு அருள் புரிந்தான் அதனல் மகிழ்ச்சி பொங்கி; தாண்டவர், தரிசனஞ் செய்வேன்' என்ற கீர்த்தனையைப் பாடிக் கொண்டே தில்லையை அடைந்தார். அம்பலவாணனைக் கண்டு மனங்குளிர, 'கண்டபின் குளிர்ந்தேன், ஜனனக் கடலைக் கடந்தேன்', என்னுங் கீர்த்தனையைப்பாடி, ஆனந்தக் கூத்தாடினர்.

இங்ஙனம் வழக்கம் போல் சிதம்பரம் சென்று தரிசித்து வரும் காலத்தில், சீர்காழிக்குத் திரும்பி வரும் போது ஒரு நாள் வயலில் மறைந்திருந்த ஒரு கொடிய அரவம் இவரைத் தீண்டிற்று அரவத்தை அபரணமாகக் கொண்ட ஆண்டவனுடைய தொண்டரல்லவா தாண்டவர்? அப்பாம்பின் விடம் இவரை என்ன. தான் செய்ய முடியும்? தாண்டவர் அம்பலவாணனை மனத்தில் துதித்து ஓர் அற்புத கீர்த்தனையைப் பாடினர். அது தான். 'அருமருந், தொரு தனிமருந்தம் பலத்தே கண்டேனே', என்ற அடியைக்

கொண்டு பாடிய பக்திச்சுவை சொட்டும் அழகிய பாசுரம். இப்பாட்டு முடிந்தவுடன் பாம்பின் கொடிய விடமும் ஏறியது தெரியாமல் இரங்கிற்று.

இங்ஙனம் சிவனருட் செல்வர், இசைப்பேரறிஞர் முத்துத்தாண்டவர் பதிகங்கள் பாடி வந்தார் முதுமை வந்துற்றது இம்மண்ணுலக வாழ்வை விட்டு எல்லையற்ற பேரின்பத்தைப்பெற அவர் மனம் அல்லும் பகலும் விரும்பியது. மாசற்ற மாணிக்கவாசகருக்குக்கிடைத்த முக்தியைத்தானும் பெற விரும்பி தில்லைக்குச் சென்று, ஒப்புயர்வற்ற ஓர் அற்புதமான கீர்த்தனையைப்பாடினார். அதுதான், 'மாணிக்கவாசகர் பேறெனக்குத்தர வல்லாயோ அறியேன்', என்ற நீண்டதொரு அழகான கீர்த்தனை கீர்த்தனை முடிந்ததும் தில்லையம்பலத்தில் எங்கிருந்தோ ஒரு சுடர் உண்டாயிற்று அச்சுடரில் - அரியதொரு சோதியில் இசைச் செல்வர் முத்துத்தாண்டவர் கலந்து, மறைந்தார்.

இசைச்சுடர் முத்துதாண்டவர் வாழ்ந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டு என்னலாம் சிவனருள் பெற்ற காலந்தொட்டு சிதம்பரம் சென்று பலப்பல கீர்த்தனைகளை அவர் பாடி இருக்கிறார். எளிய தமிழில் எல்லோருக்கும் புரியக்கூடியவாறு, சிவபக்திப் பெருக்கினால் பாமாலைகளை வேய்ந்து சிவபதம் அடைந்த மெய்யன்பர்களில் முத்துத்தாண்டவரும் ஒருவர் என்பது ஒருதலை மானிடப் பிறவி எடுத்து இறைவழிபாடு இயற்றுவதற்கு இசையை எங்ஙனம் சங்கீத சோதி தியாகராசர், பயன்படுத்திக் கொண்டு உறுதிப் பொருளான பேரின்பத்தை பெற்றாரோ அதுபோல் ஏழை எளியவரான முத்துத்தாண்டவர் சிவபக்திச் செல்வராகவும், இசைவாணராகவும் வாழ்ந்தார். இதிலிருந்து நினைப்பவர் மனத்தையே கோயிலாகக் கொள்பவன் இறைவன் என்று நாம் உணரலாம்.

கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக்கவிராயர் பாடல்களைப்போல்முத்தாண்டவர்பாடல்களும்,வானொலியிலும்,இன்னிசை மன்றங்களும் தமிழகத்தில் தினந்தோறும் எதிரொலிக்கின்றன அவருடைய இறவாப்புகழுக்கு அவருடைய கீர்த்தனங்களே போதுமான சான்றாகும், வளர்க தாண்டவருடைய புகழ் வாழ்க தமிழிசை.

சிலம்பின் பழைய உரை

பேராசிரியர்
கோ. தெய்வநாயகம், எம் ஏ. சி

தமிழின் பெருமையினை யாண்டும். எப்போதும் பறைசாற்றிக் கொண்டுள்ள சிலப்பதிகாரத்தின் சிறந்த உரைகளாக அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் விளங்குகின்றன. இவற்றில் காலத்தால் முந்தியது அரும்பத உரையே இவ்வரும்பத உரைக்கும் முந்திய ஓர் உரை சிலப்பதிகாரத்திற்கு இருந்திருக் கின்றது. அவ்வுரையினை குறிப்புரையாகவே ஒரு சில இடங்களில் அரும்பத உரைக்காரர் எடுத்தெழுதிச் செல்கின்றார் இவ்வாறு அரும்பத உரைகாரரால் எடுத்துக் கூறப்படுகின்ற சிறப்பினையும் அவருரைக்கு முந்தியதாக உள்ளக் காலப் பழமையினையும் உடைய அக் குறிப்புரையினை சிலம்பின் 'பழைய உரை' என்ற பெயரில் ஆய்வோம்.

சிலம்பின் உரைகளில் முந்தியதாகிய அரும்பதவுரையின் ஆசிரியர் பெயர் தெரியாததால் அவர் 'அரும்பத உரைகாரர்' என்றே அழைக்கப் பெறுகின்றார். இவருடைய ஊர் காலம் பற்றி தெளிவாக அறியக் கூடவில்லை. சமயம் உறுதியாக சைனமாகத்தானிருக்க வேண்டும் என்பது அவரது உரைத்தன்மையினைக் கொண்டு அறிய லாகும். "அறிவனென்றது உறையூர் ஸ்ரீகோவில் நாயனுரை"என்பன போன்ற உரை விளக்கங்கள் இவரை ஒரு சைனத் துறவியாகவே எடுத்தியம்பி நிற்கின்றன.

மேலும் தொல்காப்பியத்திற்கு முதலுரை கண்ட இளம்பூரணர் சமனேரேயாவர். அவர் காலத்தில் வேறு சமயங்களைச் சார்ந்த எவரும் தமிழ் நூல்களுக்கு நிலையான உரைகண்டதாக நாங் கண்டோமில்லை. எனவே சற்றேறத்தாழ பதினொன்றும் நூற்றுண்டின் இறுதியில், இளம்பூரணர் காலத்திற்கு ஒப்புமையாக விளங்கிய காலத்தில் இவ்வரும்பத உரைகாரர் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

உறையூர் சமணச் சாரணர்கள் தங்கியிருக்கும் படியான உறைவிடம். ஆகையால் இவ்வரும்பத உரைகாரராகிய சமணரும் ஆண்டு சில காலமோ அன்றி வாழ்நாள் முழுவதுமோ, தங்கி வாழ்ந்திருத்தல் வேண்டும். எனவேதான் தன் வாழ்விடத்தின் மீதுள்ள பற்றுலும், தான் வழிபடுகின்ற நாயனுர் மீது கொண்ட காதலாலும் 'அறவோன்' என்பதற்கு விளக்கந்தருகாலெ "அறவோன் என்றது உறையூர் ஸ்ரீ கோவில் நாயனுரை" (11:4-5) என்று குறித்தார்.

இவ்வரும்பதவுரை தோன்றியது கி. பி. 11 ஆம் நூற்ருண்டு ஆகும். சிலம்பு தோன்றியதோ கி. பி. 3 ஆம் நூற்ருண்டாகும், முதனூலிற்கும் அரும்பதவுரைக்குமிடையே 7 நூற்ருண்டுகள் இடைவெளியுள்ளது ஒருநூலிற்கு எடுத்த எடுப்பிலேயே, அரும்பதவுரை எழுவது ஏலாது.எனவே வேறு யாதானுமோர் குறிப்புரையாவது இவ்விடை நூற்ருண்டுகளில் இருந்திருத்தல் வேண்டும்

அத்தகைய ஒரு குறிப்புரை இருந்து வந்ததை அரும்பதவுரைகாரர் சிற்சில இடங்களில் குறித்துச் செல்கின்ருர். இக்குறிப்புரையினை நன்கு கற்றவர் ஆதலின், சிலம்பின் அரும்பதங்களுக்குப் பொருள் இரட்டுறப் படும் போழ்து தன் கருத்தினையும் கூறி, பின் வேறு பொருளைக் கூறி, "என்பாரு முளர்" எனவும் பல இடங்களில் அரும்பத உரைகாரர் உரை வகுத்துச் செல்கின்ருர் சில இடங்களில் இதனையொத்தே அடியார்க்கு நல்லாரும் உரை எழுதியுள்ளார். இவ்வாறு அரும்பதவுரைகாரர் குறிப்புரையினைத் தந்து உரை எழுதியுள்ள இடங்கள் சிலப்பதிகாரம் முழுவதிலும் விரவிக்கிடைக்கின்றன. கூடுதல் 12 இடங்களாக உள்ளன. அவை.

சிலம்பு உ. வே. சா. பதிப்பு.

1. "வாரநிலத்தைக் கேடின்றி வளர்த்தாங்
கீர நிலத்தி னெழுத் தெழுத்தாக" (3:67-68)

உரை:

ஆங்கு ஈர நிலத்தின் எழுத்தெழுத்தாக வென்றது பாடலிடத்துச் சொன்னீர்மையின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தை எழுத்தாக இசைக்குங் குழலோ னென்றவாறு. (இதுவரை அரும்பதவுரை) (இனி) அன்றியும் சரிகம பதநி என்பாருமுளர் (என்றது அரும்பதவுரைகாரர்க்கு முந்திய பழைய குறிப்புரையினையேயாம்) இத்தொடரை அடியார்க்கு நல்லாரும் அப்படியே எழுதியுள்ளார்.

2- 'தூய்ச் சென்று' (9:43)

உரை:

இதற்குப் பரிகாரமாய் சாத்தற்குத் தாவிப் பின்பு கண்ணகி பாற் சென்று, (இனி) கண்ணகியிடத்தே தூவி என்பாருமுளர் (என்றது குறிப்புரைகாரருரை)

3. 'ஆற்றுவியரங்கம்' ('0:156)

உரை

ஆற்றை மறைக்கும் அரங்கம் ஆவது குறை; அது சீரங்கம்:. (இனி) ஆற்றுவி என்பாருமுளர் (என்றது குறிப்புரைகாரருரை)

4. (11:17) ஆவது வரிக்கும் அடியினலே தன் பெருமையை அரசர்க்கு அறிவித்தென்பாருமுளர் (எனவும் அரும்பதவுரைகாரர் குறிப்புரைகாரருரையினை மேற்காட்டிச் செல்கின்றார்.

5 (12:74) தமர்தொழவந்தகுமரியும நளினள் என உரைப்பாருமுளர்

6 "கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையும்
கொடுமரமுன் செல்லும் போலும்" (12ல் வேறு)

எடுத்தென்பதனை எடுப்பவென்று திரித்து இவள் வில்லை எடுப்பச் செல்லுமென்பாருமுளர்.

7. பாண்டில் (14:168) இரண்டுருளையுடைய சகடம் கொல்லாப் பாண்டில் (இனி) பாண்டியென்று பாடமோதி கூடாரப் பண்டி என் பாருமுளர்.

8. ஐயவித்துலாமும் கைபெயரூசியும் (15·213)

ஐயவித்துலாம் — கதவை அணுகாதபடி கற்கவி தொடங்கி நாற்றுந் துலாம்; (இனி) அப்புப் பற்றுக்கை தூக்கிற்று என்பாருமுளர்.

கைபெயரூசி — கையிட்கண் பொதுக்கும் ஊசி. (இனி) பொய் மூசி என்று பாடமோதி மாற்றுரைக்கையைப் பொய்யாக்கு மூசி என்பாருமுளர்.

பனை → வேய்வடிவாகப் பண்ணிவைப்பது (இனி) முர சென்பாருமுளர்.

9 இயல்பிற்குன்று மடைக்கலந் தன்னெடும் (16:21-22)

இயல்பிற்குன்றுக் கலமென்றார் புதுக்கலத்தை, (இனி) மடை மேல் ஏற்றுவாருமுளர்.

10. தொழுனைத் துறைவனேடாடிய பின்னையணி நிறம் பாடுகம் யாம் (17 பாட்டு 3)

"தொழுனைக் கணவனே டாடிய பின்னை
யணிநிறம் பாடுகம் யாம்" என்று ஒரு குறள் வெண்பா இட்டோதுவாரு முளர்.

11. "குரவை முடிவிலோ ருரரவங் கேட்டு
விரைவொடு வந்தாளுளனன்" (18:7-8)
வந்தாளென்றது ஐயையை. வேறுருத்தி என்பாருமுளர்.

12. 'ஆடக மாடம்' (26:62)
திருவனந்தபுரம்-இரவிபுரம் என்பாருமுளர். என்பன வரையிலாம்.

இக்குறிப்புரை 26 ஆவது காதையிலும் காணக்கிடைப்பதால் முதற்காதை முதலாக முப்பது காதை முடிய சிலப்பதிகாரம் முழுமைக்கும் இக்குறிப்புரை இருந்திருக்கின்றது என்பது புலனுகின்றது

அறிவனென்றது உரையூர் ஸ்ரீ கோவில் நாயனுரை என்ற அரும்பதவுரையினையே அப்படியே அடியார்க்கு நல்லாரும் எழுதியுள்ளார் உறையூரையோ சிலம்பில், சமணச் சாரணர் வதியுமிடமாகக் காண்கிறேம். எனவே அடியார்க்கு நல்லார்க்கு அரும்பதவுரை கிடைத்தது உறையூரில் தான் என்று கூட கூறலாம். ஏனெனில் அடியார்க்கு நல்லாரும் ஒரு சமணராதலின் அவரும் அச்சாரணர் வதிவிடத்தில் வாழ்ந்திருக்கலாம்.

இக்குறிப்புரை ''குறிப்புரையாக'' த் தோன்ற வேண்டிய இன்றியமையாமை என்ன? ஒரு நூலுக்கு உரை தோன்ற வேண்டிய தேவை. அதனைக் கற்போரிடத்துக் காணப்படும் நுண்ணுணர்வுக் குறைவினுலேயே எழுகின்றது இதனைத் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர்.

"உரையின்றி பொருள் நனி விளங்கிய காலம் ஒன்று ம்இருந்தது குனக் குறிப்பிடுவர். அத்திறன் படிப்படியாகக் குறையக் குறைய வ்றிப்புரையும், அரும்பதவுரையும், காண்டிகையும், விருத்தியும் அண்டப்பட்டன. வேண்டற்பாடுகளிடையே நாற்ருண்டுகள் னமைவது இயல்பு. எனவே அரும்பத உரை வேண்டப்படுகின்ற அறிவுத்திற நூற்ருண்டிற்கு முன்னர்தாம் குறிப்புரை வேண்டப்பட்ட நூற்ருண்டு அமைந்திருக்க வேண்டும் என்பது உறுதி. எனவே அந்நூற்ருண்டிற்கேற்ப குறிப்புரை எழுதப்பட்டிருக்க வேண்டும் அது 11 ஆம் நூற்ருண்டிற்கு முந்தியது என்பது தெளிவு.

ஆறு, ஏழு நூற்றுண்டுகள் தமிழகத்தின் சமயப் பூசல்களின் காலம். சமணம், சைவத்தால் முழுமையாக அழிக்கப்படுகின்ற காலம். புலவுத் துறந்த நோன்புடையராம் சமணர்கள் தமிழ்த் தொண்டையே தலைத் தொண்டாகக் கொண்ட நிலையில் தமிழ். வளர்த்தவராவர். இதனை நம்மிலக்கண இலக்கியங்களில் பெரும் பாலன அவர்களால் எழுதப்பட்டிருத்தலைக் கொண்டு அறியலாகும் அச்சான்றோர் அமைதியாக வளமாக வாழ்ந்து கொண்டிருந்த நிலையில் அவர்களால் தமிழ் வளர்க்க முடிந்தது. அவ்வமைதி மாறி சம்பந்தர், அப்பர், சுந்தரர், நாயன்மார்கள் இவர்களது தாக்குதலுக்கு இலக்காகி தங்களை நாட்டினின்றும் ஒளித்து தற்காத்துக் கொள்ள வேண்டிய அமைதியற்ற நூற்றுண்டுகளாக இவ்வாறே ழெட்டு நூற்றுண்டுகள் அவர்களுக்கு அமைந்தன.

அமைதியற்ற சூழ்நிலையில் அவர்களால் முழுமையாக இலக்கண இலக்கியங்களைப் புதியதாகப் படைக்க இயலவில்லையாயினும். எளியோர்க்கு பழ நூற்களைப் புகட்டும் பேற்றினைமட்டும் பெற்றிருக்க வேண்டும். அதற்காகவே அவர்களின் வாழ்விடங்களில் (மலைகளில்) 'காகப் பள்ளிகள்' தோன்றி இன்றும் அப் பெயரில் வழங்கி வருகின்றன. அவ்வாறு நூல் பயிற்றுவித்தலின், அவர்களால் அந்நூல்களின் சிறப்புப் பகுதிகளுக்கும், கடினப் பதங்களுக்கும், சீரிய கருத்துகளுக்குமாக குறிப்புக்கள் மாணக்கர்க்கு போதிக்கப்பட்டன. அப்போதனைகளை மாணக்கர் குறித்து வைத்துக்கொள்ள உதவு மாறுசீரிய ஒன்றே எல்லோர்க்கும் பொதுவதாக 'ஒரு உரை' எனுமுறையில் வழங்கப்பட்டிருக்கின்றது, இந்நிலையில், சிலப்பதிகாரத்திற்கு வழங்கிய 'ஒருரை'யே இப்பழைய குறிப்புரை எனக் கொள்ளுதல் சாலும்,

இந்நூற்றுண்டுகள் பக்திப் பாடல்களின் தோற்றக் காலம். !இன்றியமையாமைக் கேற்பவே எழுச்சி மிகுந்த சிறுசிறு பக்திப் பாடல்களும், சிறுநூல்களும், குறிப்புக்களுமாகவே எழுச்சி எழுந்தது என்பது தேவார, திவ்வியப் பிரபந்தங்கள் காட்டுகின்ற சான்றுகளாகும். அந்நிலையும் இக்குறிப்புரைத் தோற்றத்திற்கொப்பும்.

தொகையாக விளங்கிலங்கிய இக்குறிப்புரையின் 'விரி' அரும்பதவுரையேயாம். சிலம்பின் இயலிசை நாடகப் பிரிவுகளுக்கு அரும்பதவுரைகாரர் காட்டுகின்ற விளக்கங் கொண்டு, அவர் தாங்கற்ற குறிப்புரைக் குறிப்பு விளக்கச் சொற்கே விளக்கவிரி தருகின்ருர். என்பது நமக்குப் புலனுகின்றது.

இந்நிலையில் உரையாசிரியர்கள் காலம் வலுவுற்று நச்சர் சேனுவரையர், பேராசிரியர் தோன்றினர், அவர்களுடே அடியார்க்கு நல்லார் எனும் 'நிரம்' பையரும் தோன்றினர், இவர் பொப்பையர் கோன் எனும் வள்ளலாற் புறக்கப்பெற்ற செய்திகள் வரலாற்றுச் செய்திகளாகும். எனவே கி. பி. 13- ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இவ்வடியார்க்கு நல்லார் சிலம்பிற்கு தொகைவிரி எனுமுறையில் முன்ரும் வகையில் கண்டிருத்தல வேண்டும்.

இவ்வாருக அரும்பதவுரைக்கும், அடியாருக்கு நல்லாருரைக்கும் அடிப்படையாக, காலத்தால் முந்தியதாக, பக்திக்கால நூற்ருண்டில் எழுந்ததாக உள்ள சிலப்பதிகாரத்தின் பழையவுரையாகிய இக்குறிப்புரை, புலம் மிக்கதும், ஆய்விலக்கிற்கு மிகுவாகப் பயன்படக் கூடியதென்பதையும் தமிழுலகம் அறுவதாக.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த் துறை

பன்னிரண்டாவது கருத்தரங்கு

திருக்குறள் கருத்தகம் - 2

அண்ணாமலைநகர்,
19—3—1976.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை திருக்குறள் பற்றிய பன்னிரண்டாவது கருத்தரங்கினை மார்ச்சு 13, 14 ஆகிய இரு நாட்களிலும் விரிவாக நடத்தியது. கடவுள் வாழ்த்தொடும் பல்கலைக் கழகத்தை நிறுவிய அண்ணாமலையரசர் வாழ்த்தொடும் ஆய்வுகள் தொடங்கின. உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பெருமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இதுகாறும் இத்துறை 200க்கு மேற்பட்ட பொருள்களில் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளது எனவும் இதனால் ஆய்வுப்போக்கு ஆசிரியர்பாலும் மாணவர்பாலும் பரவி வருகிறது எனவும் கருத்தரங்கு என்பது இன்று யாரும் கலந்துகொள்ளத் தக்க அரங்காக வளர்ந்து வருகிறது எனவும் இவ்வாய்வுகள் சில நூல் வடிவு பெற்றுள்ளன எனவும் மொழிந்தார்.

13—3—76 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் துணைப் பேராசிரியர் டாக்டர் மு கோவிந்தசாமியின் தலைமையில் திருக்குறள் கருத்தரங்கின் முதல் பகுதி தொடங்கியது திரு. சு. சோமசுந்தரம் திருக்குறள் பாயிரத்தின் பெருமை என்ற தலைப்பில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் நூலின் முழுப் பொருளைக் காட்டுவது பின்வரும் மூன்று அதிகாரங்களும் அறம் பொருள் இன்பங்களைத் தொகுத்துக் கூறுவது எனவும், பாயிரம் பாடியவர் வள்ளுவரே எனவும் உறுதிப்பட மொழிந்தார். 'திருக்குறளில் மெய்ப்பாடு' என்னும் தலைப்பில் திரு சு. கோவிந்தராசன் முகத்திலும் கண்ணிலும் தோன்றும் மெய்ப்பாடுகளைக் குறள்வழி எடுத்துக்காட்டி, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்ற அடியில் காணமுடியாத மெய்ப்பாடும். ஈர்ங்கை விதிரார் என்ற அடியில் நடவாத மெய்ப்பாடும் உண்டு என்று காட்டினார் திரு. அழ. பழநியப்பன் 'நாமக்கல் இராமலிங்கர்

உரை' என்ற கட்டுரையில் புதுமைகாணும் வேட்கை இவ்வுரை யாசிரியரிடம் மிகுதியும் காணப்படுகிறது என்றுகாட்டி. இயல்புடைய மூவர் என்பதற்கு உறவினர் நண்பர் வறியவர் என்ற உரையின் பொருத்தத்தை ஆராய்ந்தார். திரு. ஆறு. அழகப்பன் 'திருக்குறளில் நாடகப் பாங்கு' என்ற ஆய்வுரையில் ஓரங்க நாடகங்கள் கொண்டது திருக்குறள் எனவிளக்கிப் புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் வரும் குறள்களை காட்சி கூற்று முறையில் அமைத்துக் காட்டி, திருக்குறள் நாடக நூலாகவும் கருதத்தகும் என முடித்தார். 'திருக்குறள் நூற்பெயர்' என்ற ஆய்வில் திரு. அ முத்துவேலன் இந்நூற்கு வழங்கும் 33 பெயர்களைத் தொகுத்துக்காட்டி அவற்றின் தன்மையை விளக்கி முப்பால் என்பதே குறளுக்கு ஆசிரியன் வைத்த பெயர் எனத் திருவள்ளுவமாலையைச் சான்றாகக்காட்டினார். கற்புத்துறைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய திரு. அ. ஆனந்த நடராசன் திருக்குறள் காமத்துப்பாலைத் தொல்காப்பியத்தோடு ஒப்பிட்டுக் காட்டி பரத்தமையை வள்ளுவர் கூறவில்லை எனவும் அவர் காட்டும் கற்பு தூய்மையும் பேரின்பமும் உடையது எனவும் விளக்கினார்.

14—3—76 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கருத்தரங்கின் இரண்டாவது பகுதி துணைப்பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணன் தலைமையில் தொடங்கியது வள்ளுவம் கூறும் மதமும் மெய்ப் பொருளும் என்ற தலைப்பில் திரு சி. நம்மாழ்வார் இறை, உயிர், உலகம், உயிர் இறைவனை அடையும் வழி என்ற கூறுகளை எடுத்துக் காட்டி வள்ளுவம் என்ற ஒரு புதுச் சமயம் திருக்குறளில் படைக்கப் பட்டுள்ளது என்றார். திரு. பெ. இலக்குமிநாராயணன் முரணும் அமைதியும் என்ற ஆய்வுரையில் ஊழிற்பெருவலி யாவுள, ஊழையும் உப்பக்கம் காண்பார் உண்மை அறிவே மிகும் கற்றனைத்தூறும் அறிவு என்ற பகுதிகளில் காணப்படும் முரண்களையும் நடுவுநிலைமை கண்ணோட்டம் என்ற அதிகாரங்களில் காணப்படும் முரண்களையும் பரிமேலழகர் உரையுடன் வைத்து அவை முரண்கள் அல்ல எனத் திறம்பட உரைத்தார் திருக்குறளில் பழமொழி என்ற ஆய்வுரையில் திரு நா. இராமலிங்கம் பண்டைப்பழமொழிகளில் சில திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. திருக்குறளிலிருந்து சில பழமொழிகள் பிறந்துள்ளன என்று குறட்களைச் சுட்டி இன்று வழங்கும் பழமொழி களோடு ஒப்பிட்டுக் காட்டினார். பழக்க வழக்கங்கள் என்ற தலைப்பில் திரு. க.இராமச்சந்திரன் குறியெதிர்ப்பை, துச்சில்,இருத்தல் அரங்கின்றி வட்டாடுதல், தீக்காய்தல் என்றின்ன செய்திகளை

வழக்கோடு ஒட்டிப் பேசினர். திரு. சுப. இராமநாதன் திருவள்ளுவ மாலை என்ற ஆய்வுரையில் வெண்பா யாப்பு சங்க காலத்து மிகுதியும் இடம் பெற்றிலது எனவும், வரைவின் மகளிர் கள்ளுண்ணுமை முதலியன திருக்குறள் கூறும் புதிய கொள்கைகள் எனவும், திருவள்ளுவமாலையின் வெண்பாக்கள் பலரால் பல காலத்தில் பாடப் பெற்றுப் பின்னர் ஒரு வடிவம் பெற்றன எனவும் எடுத்து உரைத்தார். வள்ளுவர் கூறும் மெய்ப்பொருள் என்ற தலைப்பில் திரு சிவ. திருநாவுக்கரசு துறவற இயலில் வள்ளுவர் கூறும் மெய்ப்பொருளை அறியலாம் எனவும் இல்லறவியலின் முடிவே துறவறமாகும் எனவும் மண்ணில் நன்ருக வாழலாம் என்ற தன்னம்பிக்கை, தன்னல மறப்பு, மெய்யுணர்வு, உலகப்பொது அன்பு, இவை திருக்குறளின் மெய்ப்பொருள்களாம் எனவும் குறிப்பிட்டார். பழையன கழிதல் என்ற தலைப்பில் திரு. செ. சந்திரசேகரன் கள்ளுண்டல், புலால் உண்ணல், வேள்வி செய்தல், பரத்தமை, அரசனின் புறக்கோலங்கள், என வள்ளுவர் கடிவனவற்றை எடுத்துக்காட்டி அவர் கூறும் புதிய அறங்களை விளக்கினர்.

14—3—76 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் கருத்தரங்கின் மூன்ருவது பகுதிக்குத் தலைமையேற்ருர். திரு. சி. சிவசங்கரன் அறத்துப்பாலில் உரை வேறுபாடும் குறட்பாக்கள் என்ற தலைப்பில் பாடவேறுபாட்டாலும் புணர்ச்சியாலும் இலக்கணத்தாலும் தொகையாலும் வரும் வேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி உரையாசிரியர்களின் திறத்தினை விளக்கினர். திருக்குறட் பதிப்புக்கள் என்ற தலைப்பில் திரு ச. மெய்யப்பன் கி. பி. 1811 ஆம் ஆண்டு முதல் வந்த திருக்குறட் பதிப்புக்களைக் காலமுறைப்படி தொகுத்துத் தந்து உரைவளப் பதிப்பு, உரைவேற்றுமைப் பதிப்பு, தெளிவுரைப் பதிப்பு, மலிவுப்பதிப்பு, கையடக்கப் பதிப்பு, பரிசுப் பதிப்பு எனப் பலவகைப் படைப்புக்களின் தோற்றத்திற்குக் காரணத்தையும் காட்டி அவற்றின் சிறப்பினை நுண்மையாக விளக்கினர். பொருட்பாலில் உரைவேறுபடும் குறட்பாக்கள் குறித்து திரு. வெ. செயராமன் இரண்டு குறள்களை (87, 391) எடுத்துக்கொண்டு உரையாசிரியர்கள் வேறுபடும் தன்மையைச் சுட்டிக் காட்டினர். திரு பி. கே சார்ச்சு வீரமாமுனிவரின் இலத்தீன் மொழிபெயர்ப்பு என்ற ஆய்வுரையில் ஊழ் என்ற ஓர் அதிகாரத்தில் வைத்து முனிவரின் மொழி பெயர்ப்புத் தன்மையையும் ஊழ் என்ற சொல்லுக்கு கடவுளின்

தீர்ப்பு என அஃவர் கூறும் பொருளேயும் பரிமேலழகர் உரைக்கு மாறு பட்டு எழுதும் கருத்தினையும் புலப்படுத்தி இலத்தீன் மொழுபெயர்ப் பைத் தமிழ்ப் படுத்தினல் அது தமிழ் மக்கட்குப் பயன்படும் என்றும் அறிவுறுத்தினர். திரு உ. பழநி தொல்காப்பியமும் திருக்குறளும் என்றதலைப்பில் அறம் முதலாய மும்முதற் பொருட்கும் என்று கூறிய தொல்காப்பியத்தின் வழியே திருக்குறள் முப்பாலாக அமைந்தது எனவும் திருக்குறட்பாயிரம் கொடிநிலை என்ற மரபை ஒட்டியது எனவும் துறவறவியல் தொல்காப்பியப் புறத்தினை இயலின் விரிவே எனவும் பல குறிப்புக்களை எடுத்துக் காட்டினர். திருக்குறளில் பொருளமைப்பு என்ற ஆய்வுக் கட்டுரையில் திரு. சோம. இளவரசு வியங்கோள் நடையில் அமைந்த திருக்குறள்களைத் தொகுத்து ஆராய்ந்து ககர ஈற்றுடன் முடிகின்ற வியங்கோள்களே பல எனவும் தாம் சொல்லும் கருத்திற்கேற்ப வியங்கோளை முன்னும் பின்னுமாக அமைத்துள்ளார் எனவும் சான்றுபடக் கூறினர்.

தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின தலைவர் திரு. த. முருகேசன் இருமொழிப் புலவர் வீ. மு. சோமசுந்தரம் பிள்ளை, பூண்டிக் கல்லூரி முதுகலைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. ம. பரிமளம் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் முடிவுரையில் திருக்குறள் பற்றிய இக்கருத்தரங்குகளில் 40க்கு மேலான ஆய்வுரைகள் நிகழ்ந்தன என்றாலும் திருக்குறள் வற்ருத கலைக்களஞ்சியம் எனவும் அதனை எந்த நோக்கில் ஆராய்ந்தாலும் ஒளிவிடுவது எனவும் வாழ்வுக்குத் துணையான அந்த நூலைத் தமிழன் ஒவ்வொருவனும் கூடவே எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் அறிவுரை கூறினர். மகாவித்வான் திரு. ச். தண்டபாணி தேசிகர் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் முடிந்தது.

வள்ளுவரும் வள்ளலாரும்

திருமதி விமலா நடராசன்,
மைசூர்.

கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த வள்ளுவரையும், 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த வள்ளலாரையும் இணைத்துப் பார்க்கப் போகிறேம். சான்றேர் வெவ்வேறு காலத்தவராயினும், இடத்தவ ராயினும், இனத்தவராயினும் பண்பால் ஒன்றுபட்டேயிருப்பர்.

வள்ளுவம் சிறந்த இலக்கியம் மட்டுமல்ல. வாழ்க்கைக்கு இலக்கணமுமாகும். வள்ளுவ இலக்கணத்திற்கு இலக்கியமாய் மலர்ந்துள்ளது வள்ளலாரின் வாழ்வு.

அன்பின் விரிந்த நிலேயே 'அருள்' எனப்படுகிறது. "அருள் எனும் அன்பின் குழவி" (குறள் 757) என்று குறித்திருப்பது இதை விளக்கும் 'அன்பு' எனப்படுவது தொடர்புடையோரிடம் காட்டு வது.' அருள்' எல்லேக்குட்படாது விரிந்து செல்வது இதையே "அரு ளுடைமை" என்ற அதிகாரத்திற்கு விளக்கம் எழுதும் பரிமேலழகர் "அஃதாவது, தொடர்பு பற்றது எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை" என்று எழுதுகிறர். "எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறென்றறியோம் பராபரமே" என வாழ்வதே அருள்.

இவ்வருளுடைமை எல்லோருக்கும் எளிதில் வரப் பெறுவ தொன்றன்று 'அன்பு ஈன் குழவி' யாகிய அருள் அன்பு எனும் கருவிலே இருந்து, படிப்படியே வளர்ந்து, பதினறு படிகள் கடந்தே அருட்குழவியாகப் பிறக்கிறது

தனிமனிதன், திருமணத்தின் பின் தன் மனைவிக்குத் தன் அன்பைப் பகிர்ந்தளிக்கிறன். 'இல்வாழ்க்கை'யில், 'வாழ்க்கைத்

துணை நல'த்தால், 'மக்கட்பேறு' அடைகிறான். இந்த நிலையில் அவனுடைய 'அன்புடைமை', மலர்ந்து மணம் பரப்பத் தொடங்குகின்றது.

தனிமனிதனின் அகத்தினுள் மலர்ந்த அன்பு. 'விருந்தோம்பல்', 'இனியவை கூறல்', 'செய்ந்நன்றியறிதல்' எனச் சுற்றம், நட்பு என விரிகிறது. பின், 'நடுவு நிலைமை', 'அடக்கமுடைமை', 'ஒழுக்கமுடைமை', 'பிறனில் விழையாமை', 'பொறையுடைமை', 'அழுக்காறாமை', 'வெஃகாமை', 'புறங்கூறாமை', 'பயனில சொல்லாமை' என சுற்றத்தையும், கடந்து சென்று பக்குவமடைகிறது பக்குவமடைந்த நிலையில், 'தீவினையைக் கண்டு அச்சம்' அடைகிறது. 'ஒப்புரவறிதல்', 'ஈகை' என்னும் அருங்குணங்கள் வாய்க்கப் பெற்றுப் 'புகழ்' அடைகிறது. இந்நிலையில் பிறக்கும் ஒப்புயர்வற்ற குழவியே 'அருள்'.

வள்ளுவர், 'நுண்மாண் நுழைபுலம்' கொண்டு வகுத்தளித்த இவ்விலக்கணம் வள்ளலாரின் வாழ்க்கையில் ஒளி பெறுவதை உணரலாம். சாதாரண மனிதனின் அன்பு மலர்ந்து ஒளிரத் தொடங்குவது மக்கட் பேறடைந்த நிலையிலேயே. ஆனால் வள்ளலார் போன்ற கருவிலே திரு வாய்க்கப் பெற்ற சான்றோருக்கு இல்லறம் இல்லாமலேயே இவ்வன்பு வாய்க்கப் பெறுகின்றது. உலகமே இல்லமாக, வாழ்க்கையே துணை நலமாக, உலகத்து உயிர்களே மக்களாகக் கொண்டு இவர் தம் இல்லறம் நிகழ்வதை உய்த்துணரலாம்.

"தீராத துயர்க்கடலில் அழுந்தி நாளும் தியங்கி
அழுதேங்கும் இந்தச்சேய்க்கு நீகண்
பாராத செயல் என்னே எந்தாய் எந்தாய்
பாவியென விட்டனையோ பன்னாளாக
ஏராய அருள் தருவாய் என்றே ஏமாந்திருந்தேனே
என்செய்கேன் யாரும் இல்லேன்"

(திருவருட்பா : 94)

என்று தம்முடைய குறைதீரவே முதலில் வேண்டுகிறார். 'எல்லா உயிர்களுக்கும் அருள் புரிகின்றாயே; எனக்கு இரங்காயோ' என இறைவனிடம் தன் நிலைக்கு வருந்தியழும் நிலையையே வள்ளலாரின் தொடக்க நிலையில் காணலாம்

"உண்டாய உலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்து அவ்வுயிர்வினைகள் ஒருங்கே நாளும்
கண்டாயே இவ்வேழை கலங்குந்தன்மை
காணுயோ"
(திருவருட்பா : 96)

என இரங்கிப் பாடுகின்ருர். தன் துயர் தீர, துக்கம் நீங்கப் பாடிய பெருமான், பின் தன் ஊழுக்கும், பிறவிக்கும் அழுகிருர்.

"கூழுக்கழுவேனே கோத்தணிகைக் கோவை என்
ஊழுக்கழுவேனே ஓயாத் துயர்ப் பிறவி
ஏழுக்கழுவேனே"
(திருவருட்பா : 565)

இவ்வாறு, தன்னை நினைத்து அழும் நிலை, பக்குவமடைய அடையக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைவதைக் காணலாம்.

'தான்' என்ற நிலையைத் தாண்டி, 'உலகில் தொண்டனேன் தன்னை அடுத்தவர், நேயர், சூழ்ந்தவர், உறவினர், தாயர், கொண்டு உடன்பிறந்தோர், அயலவர் எனும் இக்குறிப்பினர்' (திருவருட்பா : 3418) முகங்களில் இளைப்பைக் கண்ட போதெல்லாம் மயங்கிய மயக்கத்தைப் பார்க்கலாம்:

"ஆர்த்த இவ்வுலகில் அம்மையர் துணைவர்
அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்த மற்றயலார் பசியினுல், பிணியினுல்
மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்த போதெல்லாம் பயந்தெனது உள்ளம்
பதைத்தது உன் உளம் அறியாதோ"
(திருவருட்பா : 3419)

என்னும் நிலையைக் காணலாம். தம் உறவினர், உடன்பிறந்தோர், நண்பர், தெரிந்தவர், அண்டை அயலார் என விரிந்த அன்பு, தெரு முழுவதும் பரவும் அடுத்த நிலையில்.

"இவ்விதி மேவும் ஓர் அகத்திலே ஒருவர்
ஒண்டுயர் மடிந்தார் அலறுகின்ருர்
என்ெருருவரோ டொருவர்தான் பேசிக்
கொண்ட போதெல்லாம் கேட்டேன
துள்ளம் குலை நடுங்கியது"
(திருவருட்பா : 3422)

என்று பாடுகிறார். வீதி வரை விரிந்த அன்பு ஊர், உலகம் என்று பரந்து சென்று நிற்பதையும்,

"இவ்வுலகில் ஊர் வீதி ஆதிகளிலே மனிதர்
ஆவி போனது கொண்டு உறவினர்
அழுத அழுகுரல் கேட்டபோதெல்லாம்
பாவியேன் உள்ளம் பகீரென
நடுங்கிப் பதைத்தது"
(திருவருட்பா : 3423)

"நீடிய பிணியால் வருந்துகின்றோர் எனநேர்உறக்
கண்டுளந் துடித்தேன்
ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தமைக்கண்டே
இளைத்தேன்"
(திருவருட்பா : 3473)

என்பதனால் உணரலாம்.

இவ்வாறு, தான், தன் உடன்பிறந்தோர், உறவினர், நண்பர், தெரிந்தவர், அயலார், தெருமக்கள், ஊரார், உலகத்தோர் எனப் படிப்படியாக வளர்ந்துவரும் கருணையை வள்ளலாரின் பாடல்களில் காண்கிறோம். இந்நிலைப் பாகுபாடே யன்றி, இன்னொன்றையும் இவர்தம் பாடல்களில் காணலாம்.

தொடக்க நிலையில், தீமைகளையும், கொடுமைகளையும், இன்னல்களையும் நேரில் கண்டே மனம் வாடுகின்றார். துன்பத்தை நேரில் கண்டும், அதை நுகர்ந்தவரின் வாயிலாகக் கேட்ட பொழுதும் அவர் கருணையுள்ளம் பதைபதைக்கிறது.

"நாதனே என்னை நம்பிய மாந்தர் ஞாலத்தில்
பிணிபல அடைந்தே
ஏதநேர்ந்திடக் கண்டு ஐயகோ அடியேன்
எய்திய சோபமும் இளைப்பும்"
(திருவருட்பா : 3424)

"கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்"
(திருவருட்பா : 3473)

"பசியினால் இளைத்தே
வீடுதோறிரந்தும் பசியறாதயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்"
(திருவருட்பா : 3471)

"பெற்றதாய், நேயர், உறவினர், துணைவர், பெருகிய பழக்கமிக் குடையோர், மற்றவர் இங்கே தனித்தனி பிறந்து மறைந்திட்ட தோறும்" (திருவருட்பா : 3425) உள்நடுங்கி உடைந்த நிலையைக் காண்கிறோம். இதுமட்டுமல்லாமல் "நன்று நாடிய நல்லோர் உயிர்ப்பிரிவைக் கீண்டு கேட்டுற்ற அன்று அடைந்த நடுக்கமும் துயரும் அளவில அளவில" (திருவருட்பா : 3426) எனப் பாடுகின்றார்.

இவ்விரக்கநிலை இன்னும் ஒருபடி உயர்ந்து, 'புரத்திலே அம்மா அப்பனே ஐயோ எனப் பிறர் புகன்ற சொல்' (திருவருட்பா : 3465) கேட்டே கலங்கும் பெற்றியைக் காணலாம். 'உலகில் நெறியலா நெறிகளில் சென்றே கொலை புரிந்திட்ட கொடியவர் என்று அயலவர் குறித்த போதெல்லாம்' (திருவருட்பா : 3427) நடு நடுங்கிய நிலையை விளக்குகிறார். எங்கோ, யாரோ, "வாள் கொண்டு ஒருவரை ஒருவர் உயிரறச் செய்தனர் எனவே கேட்ட போதெல்லாம் தளர்ந்து உளம் நடுங்கிப்" (திருவருட்பா ; 3429) போனதைக் குறிக்கிறார்.

இவ்வாறு துன்பங்களை நேரில் கண்டும், பிறர் கூறக் கேட்டும் துடித்த உள்ளம், அத்தோடு நின்றுவிடவில்லை அத்துன்பங்களை முன்கூட்டியே அறிவிக்கும் உற்பாதங்களைக் கேட்டே உலைவுறு கின்றது. இது வளர்ச்சியின் இன்னொரு படி.

"மாந்தர்கள் இறப்பைக் குறித்திட்ட பறையின்
வல்லொலி கேட்ட போதெல்லாம்"

(திருவருட்பா : 3428)

உளம் பதைக்கிறார். அது மட்டுமா! "கூகை வெங்குரல் செயுந் தோறும், வல்லியக் குரல் கேட்டயர் பசுப் போல" வருந்துகிறார்.

"காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின்
கடுங்குரல் கேட்டுளங் குலைந்தேன்
தாக்கிய ஆந்தை குரல் செயப் பயந்தேன்
சாக்குரல் பறவையால் தளர்ந்தேன்
விக்கிய வேறு கொடுஞ் சகுனஞ்செய்
வீக்களால் மயங்கினேன் விடத்தில்
ஊக்கிய பாம்பைக் கண்ட போதுளம் ஒடுங்கினேன்"

(திருவருட்பா : 3433)

என்று பாடுகிறார். "வெஞ்சகுனங் கூறதாம் விலங்கு, பறவை, ஊர்வன, வெங்கோள் செயும் ஆடவர் மடவார், ஊறுசெய் கொடுஞ் சொல் இவைக்கெலாம் உள்ளம் உயங்கினர்" (திருவருட்பா : 3434)

இவற்றேடு வள்ளலாரின் 'தீவினை அச்சம் முற்றுப் பெற வில்லை. 'நடுநிலை இல்லாக் கூட்டத்தை, கருணை நண்ணிடா அரையரை, கெடுநிலை நினைக்கும் சிற்றதிகாரக் கேடரை, பொய் யல்லால் கிளத்தாப் படுநிலையவரை, (திருவருட்பா . 3474) 'புலநெறி விரும்பினரை., (திருவருட்பா : 3477) கண்டு பயப்படும் வரை சென்றுள்ளது

வள்ளலாரின் 'அருளுடைமை, மற்றெரு பாங்கிலும் பரிண மித்து ஒளிபெறுவதை நோக்கலாம். மாந்தர்மாட்டு மட்டுமே அவர் இரக்கம் செல்லவில்லை. ஆறறிவு படைத்த மனிதனிடமிருந்து, படிப்படியே விலங்குகள், பறவைகள், எனப் பரந்து இறுதியில் ஓரறிவுயிர்களான தாவரங்களில் வந்து முடிவதைக் காணலாம்.

"காணுறு பசுக்கள் கன்றுகளாதி
கதறிய போதெலாம் பயந்தேன்
ஏனுறு மாடுமுதல் பல மிருகம்
இளைத்தவை கண்டுடல் இளைத்தேன்
கோணுறு கோழிமுதல் பலபறவை
கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலேவாளை
விதிர்த்தல் கண்டென்என வெருண்டேன்"

(திருவருட்பா : 3469)

"உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு" என்ற வள்ளுவத்தின் இலக்கணமாய் அமைவதைக் காணலாம். "பலிதர ஆடு, பன்றி, குக்குடங்கள் முதலிய உயிரைப் பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே உளம்" (திருவருட்பா : 3472) நடுக் குறுகிறார். ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிடவென்றே அமைந்த சிறிய தெய்வங்களைக் கண்டவுடனே பயப்படுகிறார். நலிதருஞ் சிறிய தெய்வமென்று, ஐயோ! நாட்டிலே பல பெயர் நாட்டி, (திருவருட்பா ; 3472) எனப் பாடுகிறார் "துன்னெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெல்லாம்" (திருவருட்பா ; 3473) நடுங்குகிறார். இந்த நிலையையும் விஞ்சி,

"மணாணினில் வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும கண்ட போதெல்லாம் நடுங்கினேன்" (திருவருட்பா : 3473) என்கிருர். பிற உயிர்களுக்கு ஊறு செய்யப் பயன்படும் கருவிகளைக் கண்ட வுடனேயே அவரது அருள் நெஞ்சம் துடிக்கிறது.

வள்ளலாரின் அருட்செல்வம், மன்னுயிர் ஓம்புதலோடு நில்லாமல், எல்லா இயங்கு உயிர்கள் மாட்டும் சென்ற நிலையைக் கண்டோம் இனி ஓரறிவுயிர்களிடமும் அவர் கருணை பொழிவதை "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" (திருவருட்பா : 3474) எனும் கழிவிரக்க நிலையால் உணரலாம். "உலகுயிர்கள் பொது எனக் கண்டிரங்காது, கொலைநெறி நின்ருர் தமக்குளம் பயந்தேன்" (திருவருட்பா ; 3477) என்னும் அவர் பாடலால்' அப்பெருமகன் உலகத்து உயிர்களிடமெல்லாம் வேறுபாடில்லாமல் கொண்டிருந்த பெருங்கருணை புலப்படும்.

அப்பெரும் அருளுள்ளம் வாய்க்கப் பெற்றிருந்தமையால்தான்,

"மண்ணுலகத்திலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறிது எனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைந்த போதிசைத்த தெல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கும் நல்வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்"

(திருவருட்பா : 3408)

என்று, இறைவனிடம் வரம் கேட்கிருர். 'அருட்பெருஞ் சோதி, தனிப் பெருங் கருணை, வள்ளல், எல்லையில்லாது, எல்லா உயிர் களிடமும் காட்டிய அருளுடைமை வள்ளுவன் வழிச்சென்றிருத்தலை நோக்குங்கால் சான்ரேர் வேறுபட்டிலர் என்பது தெற்றெனப் புலப்படும்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

"தாய்க் காற்றும் கடன்"

புலவர் வெ. தங்கமணி, தமிழாசிரியர்,
பி. கே. என். உயர்நிலைப் பள்ளி
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

இலங்கிட வையகம் இகலற நாளும்
துலங்கிடும் முருகே தூநிகர் தமிழைக்
கன்மனம் நெகிழும் கனிசுவை யாக
அன்பா லிங்கே யணிபெற ஈந்தாய்!
இயம்பிட வொண்ணு ஏற்றம் பெற்ற
தயவில் லோரைத் தாழ்த்தும் சேரனும்,
வழிவழி சான்ருய் விளங்கிய கிள்ளியும்,
இழிநிலை யகற்றிட நுழைமா வேறும்
செம்மல் தேவனும் செழுந்தமிழ்க் காத்தனர்!
அம்மொழி திறத்தால் ஆனது சிலகேள்!
குன்றம் பெயரவும், குடர்நோய் மாயவும்,
என்பைபெண் ணுக்கவும், எழில்கனி ஈயவும்,
பொதியில் வைகை சங்கம் நெருப்பிலும்
கதியில் லார்க்குக் கந்தாய் யமைந்து,
திடனுடை கல்லைத் தெப்ப மாக்கவும்,
முதலை யுண்ட பாலகன் மீளவும்,
இறையையே தன்வய மாக்கும் இயல்பும்,
முறைமுறை யாக செம்மையும் நல்கும்
கன்னித் தமிழ்போல் கடல்சூழ் நிலத்தில்
உண்டோ? இயம்புமின் இச்சகத் தோரே!
இத்தகு பெருமையை எய்திய தமிழா
மற்றையோர் போல வாழ வேண்டின்
கன்னல் மொழியில் வளம்பல செழிக்க

தென்னவா தெளிந்து மற்றய நாட்டார்
கண்ட பேற்றினை நம்மொழி பெயர்த்தும்
நன்னய மான இலக்கிய இலக்கணம்
என்றும் யாவரும் அறிந்திடும்வண்ணம்
ஈந்திடுவாயே எழிலுடை தமிழா!
கன்னித்தாயைக் காத்திட இஃதோர்
குன்ற வழியாம் அறிவாய் குமரா!
திண்ணிய மனதைக் கொண்ட
கண்ணுடைத் தமிழா செய்வாய் உடனே!

அன்பன்,

வை. தங்கமணி,

11–12–75

அறநெறி

செஞ்சொற்பாவலர் ப. சங்கரலிங்கம் அவர்கள்

(தொகுதி 70 பகுதி 3ன் தொடர்ச்சி)

"வலியிலா புல் மரத்தை வீழ்த்து தூரை போன்றே
நலிவர் புலனடக்கார் தாம்"

உரை

வலிமையில்லாத மென்மையான மரத்தை எளிதில் வீழ்த்து கின்ற தூரைக்காற்றைப்போல தம் ஐம்புலனை அடக்காதவர்கள் தாமே நலிந்துபோவர்

விளக்கம்

ஐம்புலன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன தாமே நலிவர் என்றமையால் பிற பகை வேண்டாம் என்பது பெற்றும் புல னடக்குக என்றார்.

ஒப்புமை

புலனடக்கியார் பெருமை

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து — குறள்

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியும் சிந்தை விளக்கு நின்றெறியவிட்டு
பொய்கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றி
செய்தவம் நுனித்த சீலக்கலை கதிர்த்திங்களொப்பார்

— சீவக சிந்தாமணி

அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமைபோன்றும்
"பெருங்காற்றும் குன்றசைக்கா அஃதே போல் மண்ணில்
பொறிகாத்தார் வாழ்வர் பொதிந்து"

உரை

பெறும்காற்றாக இருந்தாலும் குன்றை அசைக்காது
அதனைப் போல
பொறிகளைக்காத்து ஒழுகினர் நெடிதே வாழ்வார்கள்

விளக்கம்

பொறிகாத்தார் குன்று ஒப்பப் புகழ் பெறுவர் என்றார்.

ஒப்புமை

"இன்பம் இடையறுதின்டும் அவா வென்னும்
துன்பத்துட்டுன்பம் கெடின்" — குறள்

மணிமேகலையில் மணிமேகலை சுதமதி கூற்றுக்களையும்
"அற்றது பற்றனில் உற்றது வீடு" — திருவாய்மொழி
"ஆசையில்லார்களே அறவர் மேலவர்
ஆசையில்லார்களே அருந்தவத்தினர்
ஆசையில்லார்களே அருட்கலப்பினர்
ஆசையில்லார்களே அரியமுத்தர்கள் ... காசிரகசியம் —
" மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கைய அவாவினைக் — கைவாய்
கலங்காமற்காத்து உய்க்கும் ஆற்றலுடைகான்
விலங்காது வீடு பெறும் — நாலடியார்
காவியணிந்தும் பயன் என் கொல்? அடக்கமிலார்
மாய்நெஞ்சர் வாய்மையிலார் மாண்டு!

உரை

புலனடக்கம், மனமாசு இலார், உண்மையிலார் இவர்கள் காவியாடையணிந்து சிறப்புறினும் பயனென்ன (பயன்) இல்லை

விளக்கம்

காவியாடையின் தூய்மையைக் குறிக்கிறார், மாண்டு என்பது சிறந்த என்ற பொருளது "மாண்ட என் மக்களொடு மனைவியும் நிரம்பினர்" என்ற புறப்பாட்டில் இப்பொருளிலே வந்துள்ளமை அறிக.

ஒப்புமை

தவமறைந் தல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று" — குறள் — உஎச
"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்" — குறள்
"உற்றவுதிர மொழிப்பரன் கலிங்கத்தை
மற்றது பெற்றுக்கழுவு தலென்னெக்கும்
பற்றிணைகிய பாவத்தை மீட்டும்
பற்றெடு நின்றுபறையக்குறு மாறே " — வளையாபதி —
"அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும் நன்றெந்தாய் பாரபரமே ,, — தாயுமானவர்
"தவமறைத்து அல்ல செய்யார் — பெரியபுராணம் (சம்)
"சிறகமை பறவை பேர்ப்பான் உடம்பெலாம் செடியின்மூடிப்

பறவையைச் சிமிழ்ப்பின் வாங்கும் பாவியைப் போல்

— மேருமந்திர புராணம் — 268

" வீடு வேண்டி விழுச்சடை நீட்டல் மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டறு
ஓடுகோடல் உடுத்தல் என்று இன்னவை
பீடிலாப் பிறவிக்கு வித்து என்பவே — சீவகசிந்தாமணி 1427

" போர்த்தல் உடை நீக்குதல் பொடித்துகள் மெய்ப்பூசல்
கூர்த்த பணியாற்றுதல் குளித்த புனல் நீத்தல்
சார்த்திரிடு பிச்சையர் கிடைத்தலையராதல்
வார்த்தையில் செய்தவ மடிந்தொழுக என்றான்

— குண்டலகேசி

திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும்— வரலாற்று அமைப்பும்

திருமிகு இரா. கோதண்டராமன் எம். ஏ., எம். ஏ.

தொகுதி 71 பகுதி 2 ன் தொடர்ச்சி

*செய்தந்து வாய்பாட்டு வினைகளின் திரிபாகிய *செய்தந்து வாய்பாட்டு வினைகள், *செய்தநு வாய்பாட்டினவாக ஒடுங்கிய நிலையில், ஈற்றில் நிகழும் நகர மெல்லொலி னகரமெல்லொலியாக ஒலிக்கப்பெற்றதாகக் கொள்ளலாம். இவ்வாறு நகர னகர மெல்லொலித் தடுமாற்றம் ஏற்பட்ட நிலையில் *செய்தநு வாய்பாட்டு வினைகள் *செய்தனு வாய்பாட்டினவாகி இறுதியில் ஈற்றில் நிகழ்ந்த குற்றுகரத்தை இழந்து *செய்தன் வாய்பாட்டு வினைகளாக அமைந்தன வாதல் வேண்டும். *செய்தன் வாய்பாட்டு வினைகள் காடர்மொழியில் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக நின்று முற்றுப் பொருண்மையை உணர்த்துவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம் 1

செய்தன் 'செய்தேன், செய்தோம், செய்தாய், செய்தீர் (கள்), செய்தான்; செய்தான்,
கண்டன் 'கண்டேன். கண்டோம் (முன்னிலை படர்க்கை வினைகளையும் இவ்வாறே அமைத்துக்கொள்க)
வந்தன் 'வந்தேன், வந்தோம் (,, ,, ,,)
நடந்தன் 'நடந்தேன், நடந்தோம்(,, ,, ,,)
கொடுத்தன் 'கொடுத்தேன், கொடுத்தோம் (,, ,,)
நின்றன் 'நின்றேன், நின்றோம் (,, ,, ,,)

தமிழில் *செய்தன் வாய்பாட்டு வினைகள் — என். — ஆம்,— ஐ.—இர், — அன், — அள் — அர், — அ ஆகிய விகுதிகளை ஏற்று

1 காடர்மொழி, கேரள மாநிலத்தில் உள்ள சாலக்குடி, சோலையாறு ஆகிய காட்டுப்பகுதிகளில் வாழும் காடர் என்னும் பழங்குடியினரால் பேசப்படுகின்றது இப்பழங்குடியினர் கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைச் சரிவுகளிலும் வாழ்கின்றனர். இக்கட்டுரையில் குறிக்கப்பெற்றுள்ள எடுத்துக்காட்டுக்கள் கேரள மாநிலத்தில் உள்ள காடர்கள் மொழியில் காணப்படுவனவாகும்.

முறையே செய்தனென், செய்தனம், செய்தனை, செய்தனிர், செய்தனன், செய்தனள், செய்தனர், செய்தன ஆகிய வாய்பாட்டு வினைகள் தோற்றம் கொண்டனவாகக் கருதலாம். சங்கப்பாடல்களில் இ செய்தன் வாய்பாட்டு வினைகள் துகரக் கிளவியை ஏற்று செய்தன்று வாய்பாட்டு வினைகளாகவும் நடைபெறுகின்றன.

வந்தன்று (நற்றிணை 79·8) 'வந்தது'
விரிந்தன்று (ஷ 11·9) 'விரிந்தது'
தந்தன்று (ஷ 152.2) 'தந்தது'
மறைந்தன்று (ஷ 182.1) 'மறைந்தது'
அணிந்தன்று (புறம் 1·5) 'அணிந்தது'
அறிந்தன்று (ஷ 47.7) 'அறிந்தது(

தமிழில் ஒரு குறிப்பிட்ட பிரிவைச்சார்ந்த வினைகளில் — இன் — இறந்த கால இடைநிலையாக நடைபெறுகின்றது. எ—டு ஆடினன், பாடினன். தெலுங்கில் இறந்த காலப் பெயரெச்சவினைகளிலும் — இன் — இறந்த காலப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றது எ·டு ஆடின (ஆடு — இன் — அ), பாடின (பாடு-இன் — அ).கன்னடத்தில் — இத்) (—id) என்னும் இடைநிலை குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்த வினைகளில் இறந்த காலப் பொருண்மையைக் குறிக்கின்றது எ—டு. ஆடிதனு (ஆடு — இத் — அனு) ' ஆடினன் ' நோடிதளு (நோடு — இத் — அளு) ' பார்த்தாள்' கேளிதரு (கேளு—இத் — அரு) 'கேட்டார் (கள்), தமிழ், தெலுங்கு ஆகியவற்றுள் காணப்படும் — இன் —, கன்னடத்தில் காணப்படும் — இத் (—id—) ஆகிய கால இடைநிலைகளின் தோற்றத்தைப் பின்வருமாறு ஆராயலாம்.

தமிழ்: ஆடினன் < * ஆடினு — ஆன்
* ஆடினு —/ * ஆடிநு—< * ஆடிந்து < * ஆடிந்து< * ஆடிம்-து
* ஆடிம்—< * ஆடிய்ம்< * ஆடிய்—உம்
* ஆடிய்—< * ஆடு—இய்

தெலுங்கு: ஆடின 'ஆடிய' < * ஆடினு — அ.
* ஆடினு —/ * ஆடிநு — (தமிழில் கண்டவாறு ஆராய்ந்து கொள்க)

கன்னடம்: ஆடிதரு< * ஆடிது —அரு
* ஆடிது—< * ஆடிந்து< * ஆடிம்—து
* ஆடிம்—< * ஆடிய்ம்< * ஆடிய்—உம்
* ஆடிய் —< * ஆடு—இய்

மேலே நிகழ்த்தப்பெற்றுள்ள ஆய்வில் * ஆடிந்து — என்னும் ஒரு வினையமைப்பு தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரு கட்டத்தில் தென்படுவதைக் காணலாம். இவ் வினையமைப்பினின்று தமிழ், தெலுங்கில் காணப்படும் — இன் — என்னும் காலக்கிளவியும், கன்னடத்தில் காணப்படும் — இத் ... என்னும் காலக்கிளவியும் தோற்றம் கொண்டனவாதல் வேண்டும். இத்தோற்றத்தினை இன்னும் தெளிவாகப் பின்வருமாறு குறிக்கலாம்.

1. * ஆடிந்து > * ஆடிந்நு > * ஆடிநு > * ஆடினு > ஆடின் >
ஆடு—இன்—(தமிழ் தெலுங்கு)

2. * ஆடிந்து > * ஆடிது > * ஆடித் (a:did) > ஆடு — இத் — (கன்னடம்) இவ் ஆய்வினின்றும் தமிழிலும், தெலுங்கிலும் நிகழும் — இன் — கால இடைநிலையும், கன்னடத்தில் நிகழும் — இத் — (—id) காலஇடைநிலையும்: — * இந்து —(< — இய் —உம்—து) என்ற அமைப்பினின்றும் வெவ்வேறு முறையில் தோற்றம் கொண்டதைத் தெளிவுபடுத்தும்.

கன்னடத்தில் ஆடிதனு, மாடிதனு போன்ற வினையமைப்புக்களை ஆராயும் திராவிடமொழியாலர் — இத் — (— id —) என்பதில் உள்ள இகரத்தை இறந்தகால இடைநிலையாகவும், தகர ஒற்றை உடம்படுமெய்யாகவும் கூறிவருகின்றனர். மேற்படி வினைமுற்றுக்களின் முறையான வளர்ச்சியைக் கண்டறியாமல் இவ்வாறு கூறிச் செல்வது அவர்தம் ஆய்வுமுறையில் உள்ள குறைபாடுகளையே காட்டுகின்றது.

மேலே கண்ட ஆய்வினின்றும் இன்னொரு உண்மையும் பெறப்படும். தமிழில் ஆடு, பாடு முதலிய வினைகள் ஆடிய, பாடிய என அமைந்து இலக்கிய வழக்கிலும் ஆடின, பாடின என அமைந்து பேச்சு வழக்கிலும் பெயரெச்சப் பொருண்மையை உணர்த்துகின்றன, இவ்இரண்டனுள் ஆடிய, பாடிய போன்ற வினையமைப்புக்கள் வரலாற்றுநிலையில் முந்தியனவாகும். இவற்றின் அமைப்பு * ஆடு/ பாடு- இப்- அ என்று கொள்ளத்தக்கனவாகும் இவ்அமைப்பில் —இய்— என்பது இறந்தகாலப் பொருண்மையைக் குறிக்கும், பேச்சுத்தமிழில் ஆடிச்சி (< * ஆடிச்சு < * ஆடிய்ச்சு < * ஆடிய்த்து < * ஆடு—இய்—து)'ஆடிற்று', பாடிச்சி(< * பாடிச்சு < * பாடிய்ச்சு

<*பாடியித்து <*பாடு—இய்—து) 'பாடிற்று' போன்ற ஒன்றன் பால் இறந்த கால வினைமுற்றுக்களில் இக்கால இடைநிலை வரலாற்று நிலையில் அமைந்தியல்வதைக் காணலாம். 1 பக், 13 a பார்ப்பனர்தமிழில் வழங்கும் ஆடித்து ஆடியித்து<*ஆடு—இய்-து) 'ஆடிற்று' பாடித்து (<*பாடியித்து<*பாடு — இய்—து) 'பாடிற்று' போன்ற வினையமைப்புக்களிலும் இக்கால இடைநிலை வரலாற்று நிலையில் இடம் பெற்று நிற்கின்றது. ஆடின, பாடினபோன்ற வினைகளில் உள்ள — இன் — இறந்த கால இடைநிலை வரலாற்று நிலையில் பிந்தியதாகும். இவ் இறந்தகால இடைநிலை துகரக் கிளயின் முன் நிகழும் போது — இன்று— என அமையும் போக்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

புலம்பின்று (புலம்பு —இன்—து நற்றிணை 162·3) 'புலம்பிற்று'
தூங்கின்று (தூங்கு —இன்—து ஷை 320·1) 'தூங்கிற்று'
போயின்று (*போய் — இன் —து புறம் 380·16) 'போயிற்று'
சாயின்று (சாய் — இன் —து புறம் 12716) 'சாய்ந்தது'

தமிழில் வழங்கும் ஆடிற்று, பாடிற்று, போயிற்று போன்ற வினைமுற்றுக்கள் வினையடி+இல்+து என்ற அமைப்பினவாகும் 2 வரலாற்று நிலையில் —இல்—, —இய்— ஆகிய இரண்டு கால இடைநிலைகளும் —இன்— என்னும் கால இடைநிலைக்கு மிக முந்தியனவாகும்.

சங்கச் செய்திகள்

1976-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற தமிழ்ச் சங்க நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றோர் விபரம்

நுழைவுத் தேர்வு

முதல் வகுப்பு:
929

இரண்டாம் வகுப்பு:
926, 942

மூன்றாம் வகுப்பு:
924, 925, 928, 932, 934, 935, 946, 950, 953, 954 955, 958.

இளம்புலவர் தேர்வு

முதல் வகுப்பு:
இல்லை

இரண்டாம் வகுப்பு:
3415, 3426, 3427

மூன்றாம் வகுப்பு:
3413, 3416 முதல் 3418, 3422, 3424, 3425

புலவர் தேர்வு

முதல் வகுப்பு;
4844, 4854, 4863, 4864, 4872, 4986, 4998

இரண்டாம் வகுப்பு:
4642, 4643, 4662, 4668, 4669, 4691, 4692: 4700, 4712 முதல் 4714, 4729, 4737, 4738, 4750, 4755, 4763, 4770, 4811, 4824, 4827, 4850, 4831, 4849, 4855 முதல் 4858, 4862,

4869, 4874, 4877, 4885, 4888, 4889, 4894 முதல் 4897 4902, 4913, 4930, 4935, 4936, 4954, 4976, 4978, 4981 4982, 4992, 4994, 5009 முதல் 5011

மூன்றாம் வகுப்பு

4644 முதல் 4651, 4654 முதல் 4656, 4658 முதல் 4661, 4663 முதல் 4667, 4670 முதல் 4673, 4675, 4682, 4683, 4685 முதல் 4687. 4689, 4693 முதல் 4695, 4697 முதல் 4699, 4701 முதல் 4706, 4708 முதல் 4711, 4715, 4716, 4721 முதல் 4728, 4730 முதல் 4733. 4735, 4736, 4739, 4740, 4742 முதல் 4744, 4748 4751 முதல் 4754, 4757 முதல் 4759, 4761, 4762, 4765 முதல் 476) 4772, 4779, 4781 முதல் 4783, 4785, 4787, 4789 முதல் 4793 4795 முதல் 4800, 4802 முதல் 4804, 4806 முதல் 4810, 4812, 4814 4816 முதல் 4819, 4822, 4823, 4825 முதல் 4827, 4829, 4832 4835, 4842, 4845 முதல் 4848, 4850, 4852, 4853, 4859 முதல் 4861, 4865 முதல் 4868. 4870, 4871. 4873, 4875, 4876, 4878 முதல் 4881, 4884, 4886, 4890 முதல் 4893, 4898, 4900, 4901, 4903 முதல் 4908, 4910, முதல் 4912, 4914, 4915, 4917, முதல் 4919, 4922 முதல் 4924, 4926, 4627, 4931, 4933, 4934, 4937 முதல் 4940, 4943 முதல் 4948, 4950, 4955 முதல் 4959, 4962, முதல் 4964, 4966 முதல் 4975, 4979, 4980, 4983, 4985, 4987, முதல் 4991, 4903, 4995 முதல் 4997, 4999, 5000' 5003 முதல் 5008, 5012, 5013, 5015, 5016, 5018 முதல் 5024, 5028

(டி. பி. எம். பெரியசுவாமி)
செயலாளர்,

தேர்வுக்குழுவினர்

மா. தனுக்கோடிபாண்டியன்
து. அ. தேவசிகாமணி
ஆ. ஆண்டியப்பன்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

புலவர் தேர்வு பற்றிய அரசாணை

மதுரை தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் காலத்தினை தமிழக அரசு தம் G. O. Ms. No. 63 Education Dated 17—1—71 வழியாக 31—3—76 க்குள் வரையறுத்திருந்தது. இப்போது 1977 ஏப்ரல் திங்கள் வரை நடத்தப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெறவும் பள்ளிகளில் ஆசிரியர் பணிபெறவும் வாய்ப்பாக தம் அரசாணையை மாற்றி அமைத்துள்ளமை பாராட்டுக்குரியது. மாற்றிய அரசாணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

GOVERNMENT OF TAMILNADU

ABSTRACT

Education—Elementary and Secondary—Appointment of Tamil Pandits Recognition of 'Pulavar Panditham' title issued by the Madurai Tamil Sangam as a qualification for oppointment as Tamil Pandits—orders issued·

EDUCATION DEPARTMENT

G. O. Ms. No. 670 Education Dated 10-4-1976

Read;-

1. G. O. Ms. No· 63, Education, dated 17-1-74
2. From the Presideut, The Tamil Education Trust, Tirunelveli Petition dhted 19-8-'75
3. From the Maduri Tamil Sangam, Madurai Petition dated nil.
4. From the President, Tamil Nadu Madurai Tamil sangam, Pulavar Pattatharigal Sangam Petition dated 24-3-1976

5. From the Director of collegiate Education letter.
Ro. No. 121762/E3/75 dated 6-1-76

6- From the Director of School Education letter No. 1426/D3/73. dated 9-3-76 and 23-3-76.

ORDER:

In modification of the orders issued in G. O Ms. No. 63. Education dated 17-1-74, the Government direct that 'Pulavar Pandi-tham' title issued by Madurai Tamil Sangam for examinations held till April, 1977 only, be recognised as a qualification for admissions to the Pandits' Training courses conducted by the Training Colleges and for appointment as Tamil Pandits in schools. The Government also direct that the persons who had passed the Pulavar Panditham Examination held by the Madurai Tamil Sangam upto April, 1977 be admitted to the Pandits training courses conducted by the Training Colleges.

2. Necessary amendment to Tamil Nadu recognised Private Schools (Regulation) rules 1974 will be issued separately.

3. The Director of School Examination and the Director of Collegiate Education, Madras are requested to take necessary action with reference to the orders in para I above.

(By order of the Governor)

C. C. RANGABASHYAM
Secretary to Government,

கு. ஆண்டியப்பன்,
(பொறுப்பாசிரியர், செந்தமிழ்)

சங்கச் செய்திகள்

செந்தமிழ்க் கல்லூரி ஆட்சிக் குழு

மதுரைப் பல்கலைக் கழக விதிகளின்படி மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆட்சிக்குழுவினரால் செந்தமிழ்க் கல்லூரிக்கு அடியில் குறிப்பிட்டுள்ளவர் ஓராண்டிற்கு ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. டி. பி. எம். பெரியசுவாமி (செயலாளர், தமிழ்ச் சங்கம்)
2. ,, மா. தனுக்கோடிபாண்டியன் பி. ஏ. பி. எல். தாளாளர் / செயலாளர்
3. ,, மா. சங்கரபாண்டியன் பி, ஏ,, பி, எல்.
4. ,, கே. கந்தசாமி பி. ஏ., பி. எல்.
5. ,, டி. ஏ. தேவசிகாமணி பி. ஏ. பி. எல்
6. ,, என். எஸ். முத்துமலைச்சாமி பி. ஏ., பி எல்.
7. ,, வெ. இ. பரசுராம்
8. ,, ஆர். வி. நாராயணன் எம். ஏ. முதல்வர்
9. ,, பத்மா எம். ஏ.
10. ,, வி. சி. சீனிவாசன்
11. ,, பல்கலைக் கழக நியமன உறுப்பினர்

டி. பி. எம். பெரியசுவாமி
செயலாளர்

திருமிகு ஆர். காசிநாததுரை அவர்கள்

முகவை.

சந்தவிசைப் பாடலும் நூற்றுக்கணக்கில் வெண்பாக்களும் விரைந்துபாடி மக்களை வியப்பில் ஆழ்த்துபவர் உயர்திரு ஆர். காசிநாததுரை அவர்கள் என்பதை அறியாதார் இலர்.

பக்திச்செறிவையும்,வேண்டுதலும் ஒன்றிய அவர் தம் வெண்பாக்களைப் படிக்குந்தோறும் தனி இன்பம் உண்டாகும்.

இதோ அவர்தம் பாக்கள்.

ராகம் — பியாகடை தாளம் — ஆதி

பல்லவி

என்ன பிழை செய்தாலும் உன்னை யன்றி
மன்னிக்க யெவரும் உலகிலுண்டோ
— சின்னமதி தன்னை யுள்ள நான்

அனுபல்லவி

மன்ன, கதிர்காம நின் மகிமை யறிந்து சதா
உன்னை மனமிறுத்தி ஒவ்வொன்றும் செய்ய அருள்

சி. ஸ்வரம்

ஸா, நிதப மதபம கரிஸ நிதப / ஸா: / , த
த ப ஸநிஸகரி காம / தாமபதப ஸநிஸ கரிகா மகரி /
ஸரி நிதப சுரிஸாகரி ரிஸஸநி ததபப ஸா
பபரீ பப கரிரிஸ ஸநிததப ஸாரிநிஸா தப ஸா பாதமப
கமபா மகரிஸா ஸகரிகா மதபஸா கரிக

சரணம்

மதியை நீ தந்தும் அதை மதியாமல் நான் மேலும்
விதியையும் வென்று விட வீண் எண்ணம் கொண்டேன்
கதி நினை இருதாள்கள் கவியோ டவை புகழ்ந்து
துதி செய்து காசி, மனம் சுகம் பெற அருளைய்யா

மதுரை தமிழ்ச் சங்கத் தேர்வில் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

மதுரைத் தமிழ்ச் சங்கம் பிப்ரவரி 1976 ல் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் நடாத்திய தமிழ்த் தேர்வில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் மாநில அளவில் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்று ரொக்கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுக்குரிய பரிசுத்தொகை அந்தந்த உயர்பள்ளித் தலைமையாசிரியர், அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. பரிசுக்கு உரிய மாணவர்கள் அப்பள்ளித் தலைமையாசிரியர், கல்லூரி முதல்வர் அவர்களிடம் சென்று தொகையினைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம், மாநில அளவில் பரிசுபெற்ற மாணவர்களையும் ஒவ்வொரு கல்லூரி. பள்ளியில் முதல்நிலையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் வாழ்த்திச் சிறப்பிக்கின்றது எமது தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் பெருமளவில் மாணவர்களைக் கலந்துகொள்ளச் செய்த கல்லூரிமுதல்வர், தமிழ்த் துறைத் தலைவர், பள்ளித் தலைமையாசிரியர், தலைமைத் தமிழாசிரியர்களுக்கும் மற்றும் தமிழன்பர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

டி. பி. எம். பெரியசுவாமி,
செயலாளர்.
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

புகுமுகம்

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	எஸ். கஜேந்திரன், மஜ்ஹருல் உலூம் கல்லூரி, ஆம்பூர், வடஆற்காடு மாவட்டம்.	144/200	முதல் பரிசு	50-00
2	வெ. துரைக்கிருட்டிணன், டாக்டர். கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, சேலம்-3. (முதல் பரிசுத் தொகை ரூ. 100/-ஐ சமமதிப்பெண் பெற்ற இருவருக்கு ரூ. 50/- வீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது)	144/200	முதல் பரிசு	50-00
3	கு. வெ. ராதிகா, சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர், தென்ஆற்காடு மாவட்டம்.	140/200	இரண்டாம் பரிசு	50-00
4	கே. கண்ணம்மா, பிராவிடன்சு மகளிர் கல்லூரி, குன்னூர், நீலகிரி மாவட்டம்.	137/200	மூன்றும் பரிசு	25-00

இளங்கலை முதலாண்டு

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	உமாமகேஸ்வரி, பிராவிடன்சு மகளிர் கல்லூரி, குன்னூர். நீலகிரி மாவட்டம்.	70/100	முதல் பரிசு	100-00
2	எஸ். கணபதி, அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி, வடசென்னிமலை.	69/100	இரண்டாம் பரிசு	50-00
3	பி. வெங்கடேஸ்வரன், சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்.	67/100	மூன்றும் பரிசு	25-00

இளங்கலை இரண்டாமாண்டு

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	ஆர். கிருஷ்ணமூர்த்தி, மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை.	73/100	முதல் பரிசு	100 00
2	என். பானுமதி பிராவிடன்சு மகளிர் கல்லூரி, குன்னூர், நீலகிரி மாவட்டம்.	71/100	இரண்டாம் பரிசு	50-00
3	ல. அமிர்தராணி, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, பாண்டிச்சேரி.	68/100	மூன்றும் பரிசு	25-00

மதுரைப் பல்கலைக் கழகம்

புகுமுக வகுப்பு

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	இரா. மோகன், யாதவர் கல்லூரி, மதுரை.	144/200	முதல் பரிசு	100-00
2	டி. பி. நித்யமாலா, பாத்திமாக் கல்லூரி, மதுரை.	143/200	இரண்டாம் பரிசு	50-00
3	சுப. அருணாசலம், விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு, சோழவந்தான்	141/200	மூன்றும் பரிசு	10-00
4	ச. இராசகோபாலன், விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு, சோழவந்தான்.	141/200	மூன்றும் பரிசு	10-00
5	ம. இக்பால், சௌராட்டிராக் கல்லூரி, மதுரை.	141/200	மூன்றும் பரிசு	10-00

(மூன்றும் பரிசுத்தொகை ரூ. 25/-உடன் ரூ. 5/-சேர்த்து சமமதிப்பெண் பெற்ற மூவருக்கும் ரூ. 10/- வீதம் பகிர்ந்து அளிக்கப்படுகிறது)

இளங்கலை முதலாண்டு

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	எஸ். சாரதா, ஸ்ரீ சத்குரு சங்கீத வித்தியாலயம், மதுரை-2	63/100	முதல் பரிசு	50-00
2	எம். அன்னலெட்சுமி செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.	63/100	முதல் பரிசு	50-00
	(முதல் பரிசுத்தொகை ரூ. 100/–ஐ சமமதிப்பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 50/– வீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது)			
3	வ. என். இராஜலட்சுமி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி.	62/100	இரண்டாம் பரிசு	50–00
4	வி. இராஜகோபாலன் மதுரைக் கல்லூரி, மதுரை.	60/100	மூன்றும் பரிசு	25-00

இளங்கலை இரண்டாமாண்டு

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	என். கஸ்தூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி.	133/200	முதல் பரிசு	100-00
2	கே. எம். அஸ்ருப் உசேன், அம்பைக் கலைக் கல்லூரி, அம்பாசமுத்திரம்.	130/200	இரண்டாம் பரிசு	50-00
3	எஸ். தமிழரசி, பாத்திமாக் கல்லூரி, மதுரை.	127/200	மூன்றும் பரிசு	25-00

பரிசுக்குரிய உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் விபரம்

வ. எண்	மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும்	மதிப்பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1	திரு. ஆறுமுகம், ராஜா திருநாவுக்கரசு முதலியார் உயர்பள்ளி, களத்தூர், காவேரிப்பாக்கம், வட ஆற்காடு மாவட்டம். (8029)	180/200	முதல் பரிசு	100-00
2	இரா. செயந்தி, கண்ணகி அரசினர் பெண்கள் உயர்பள்ளி, வில்லியனூர், பாண்டிச்சேரி. (21177)	172/200	இரண்டாம் பரிசு	25-00
3	ஆர். இராஜேஸ்வரி, அரசினர் பெண்கள் உயர்பள்ளி, மதுரை. (91181)	172/200	இரண்டாம் பரிசு	25-00
4	ஆர். ஸ்ரீதரன், சேதுபதி உயர்பள்ளி, மதுரை.	171/200	மூன்றும் பரிசு	25-00
5	ஆர். தேவராசு, நகராட்சி உயர்பள்ளி, கடலூர், தென்னாற்காடு மாவட்டம்.	170/200	ஊக்கப் பரிசு	10-00
6	கோ. உஷா, தவத்திரு ஆறுமுக நாவலர் உயர்பள்ளி, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.	169/200	ஊக்கப் பரிசு	10-00
7	இரா. செயந்தி, கண்ணகி அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வில்லியனூர், பாண்டிச்சேரி.	169/200	ஊக்கப் பரிசு	10-00
8	எச். அப்துல் ரஸாக், அமெரிக்கன் கல்லூரி உயர்பள்ளி, மதுரை.	168/200	ஊக்கப் பரிசு	10-00
9	கே. புருஷோத்தமன், நகராட்சி உயர்பள்ளி, கடலூர், தென்னாற்காடு மாவட்டம்	167/200	ஊக்கப் பரிசு	10-00
10	என். சீனிவாசன், தவத்திரு ஆறுமுகம் நாவலர் உயர்பள்ளி, சிதம்பரம்.	167/200	ஊக்கப் பரிசு	10-00

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்.

1	வைத்திய சாரசங்கிரகம்	ரூ.	15—00
2	பன்னூற்றிரட்டு	ரூ.	3—00
3	தமிழ்ச் சொல்லகராதி முதற்பாகம்	ரூ.	10—00
4	பெருந்தொகை	ரூ.	7—00
5	அரும்பொருள் விளக்க நிகண்டு	ரூ	2—50
6	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	ரூ.	2—50
7	சுகசந்தாசன தீபிகை	ரூ.	1—50
8	தமிழர் வாழ்வு	ரூ.	2—00
9	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	ரூ.	5—00
10	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும்உரையும்)	ரூ	1—00
11	குருகை மான்மியம்	ரூ	6—00
12	T-ஸ்ரீநிவாசயங்கார் நினைவு மலர்	ரூ	1—00
13	கோவை கலம்பக நூல்கள்	ரூ	5—00
14	உலா நூல்கள்	ரூ	5—00
15	பாமாலை நூல்கள்	ரூ	7—00
16	இலக்கிய நூல்கள்	ரூ	7—00
17	இலக்கண நூல்கள்	ரூ	5—00
18	மனீஷா பஞ்சகம்	ரூ	5—00
19	பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு விழா மலர்	ரூ.	1—00

குறிப்பு; 1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 % முன்பணம்அனுப்பவேண்டும். பாக்கித் தொகைக்கு புத்தகங்கள்வி.பி.பி மூலம்அனுப்பப்படும்.

2 விற்பனையாளர்களுக்கும் நூலகத்திற்கும் 15% கழிவு கொடுக்கப்படும்.

3. புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குவோரே ஏற்கவேண்டும்.

"செந்தமிழ்"

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இம்மலர் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப் பெறுவது.

ஆண்டுச் சந்தா ரூ. **5—00**

புலவர்கள் பலர் எழுதிய அரியகட்டுரைகள், ஆய்வுரைகள் கொண்ட பழைய "செந்தமிழ்" இதழ்கள் ஆண்டு வாரியாகப்பைண்டு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விலை தனித் தனி ரூ **5—00**

தேவைக்கு: **டி. பி. எம். பெரியசுவாமி**

செயலாளர்: மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை-1
என்ற முகவரிக்கு எழுதவும்

இவ்விதழ் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்காக செயலாளர் திரு. டி.பி.எம். பெரியசுவாமி அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது

அச்சிட்டோர்:

குமார் பிரிண்டர்ஸ், 63, தெற்கு ரதவீதி, விருதுநகர்.